2017 பெப்ரவரி 20
திங்கள்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ■ ஜ.அவ்வல் பிறை 23 ■ பக்கங்கள் 08 ■ மணி 03 ■ ஒளி 029

NAVAMANI DAILY
නවමණි දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

QD / 154 / NEWS / 2017





04»
முஸ்லிம்களை அச்சத்தில் ஆழ்த்தும் இலங்கை – இஸ்ரேல் உறவு

05»
விவசாய காணிகள் அபகரிப்பு ரொட்டவெவ மக்கள் அவதி



08»
கொல்கத்தா அணியில் நிரோஷன் திக்வெல்ல?

# தம்புள்ளை பள்ளிக்கு காணி வழங்காதீர்






## கையெழுத்து வேட்டை நேற்று ஆரம்பம்

■ வஹக்கோட்ட ஏ.சி.எம்.முனாஸ்

தம்புள்ளை நகரின் முஸ்லிம் பள்ளிவாசலுக்குப் பதிலாக மாற்றுக் காணி வழங்குவதற்கு மாநகர சபைகள் மெகா பொலிஸ் அமைச்சு எடுத்துள்ள தீர்மானத்தை கைவிடக்கோரி ஒரு இலட்சம் கையொப்பங்களைத் திரட்டும் இயக்கம் நேற்று நகரின் ஐந்து இடங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

"தம்புள்ளை தொழுகை மடுவம் வேண்டாம்" என்ற பெயரில் இந்த இயக்கம் நேற்று காலை

07 »»»»»



## உள்ளூராட்சி தேர்தல் ஐ.தே.கவுடன் கைகோர்க்கும் சம்பிக

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் கீழ் அடுத்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது. கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக ரணவக இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த பாராளுமன்றத்

07 »»»»»

தம்புள்ளை பள்ளி விவகாரம்;

## 80 பேர்ச் காணி விடயத்தில் ஜனாதிபதி தலையிடவேண்டும்

முஸ்லிம் முற்போக்கு முன்னணி வேண்டுகோள்

■ எம்.எஸ்.எம். ஸாகிர்



தம்புள்ளைப் பள்ளிவாசலை இடமாற்றிச் செல்வதற்கும் வாகனத் தரிப்பிடம் போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்டு போதுமான இடவசதியுடைய காணிகளை அதாவது, 80 பேர்ச்சஸ் காணியை பெற்றுத் தருவதற்கு ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென முஸ்லிம் முற்போக்கு முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னாள் முஸ்லிம் கலாசார

07 »»»»»

## ஜனாதிபதி, பிரதமருடன் ஜெய்சங்கர் இன்று சந்திப்பு

■ அ.அருண் பிரசாந்த்

இலங்கைக்கு மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வருகைத் தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளரான எஸ். ஜெய்சங்கர் இன்றைய



07 »»»»»

ஹெம்மாதகம நீர்விநியோக திட்டம்



■ ஷபீக் ஹுசைன்

07 »»»»»

# களுத்துறை படகு விபத்தில் 13 பேர் பலி; எழுவர் மீட்பு

■ ஆதில் அலி சப்ரி

பேருவளையிலிருந்துதிருவிழாவொன்றுக்கு கடல் மார்க்கமாக களுத்துறை வந்த படகொன்று கவிழ்ந்ததில் 13 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

நேற்று காலை 9.30 மணியளவில் ஏற்பட்ட இந்த படகு விபத்தில் மேலும் 7

07 »»»»»



## நாட்டின் பல பகுதிகளில் இன்றும் கடும் மழை

■ பீ.எப்.எம் றிஷாட்

நாட்டின் பல பாகங்களில் இன்று மாலை வேளையில் மழை பெய்யக்கூடும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.நாட்டைச் சூழவுள்ள பிரதேசங்களில் பலத்த காற்று வீசக் கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இன்றும் தென், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மழை பெய்வதற்கான சாத்தியக்கூறு காணப்படுவதாக வளிமண்டலவில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சப்ரகமுவ மாகாணம், மற்றும் காலி மாத்தறை மாவட்டங்களில் பிற்பகல் 2 மணியின் பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற் பிராந்தியங்களில் காற்றின் வேகம் சற்று அதிகமாக எதிர்

07 »»»»»

## கேப்பாப்பிலவு; கொழும்பு, யாழில் ஆர்ப்பாட்டம்

■ அ.அருண் பிரசாந்த்

கேப்பாப்பிலவு மக்களின் மீள்குடியேற்றத்துக்கு ஆதரவு தெரிவித்து எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பிலும்

07 »»»»»

## அரசமைப்பு சர்ச்சையிலிருந்து மக்களை திசைதிருப்ப நல்லாட்சி அரசு முயற்சி



■ அ.அருண் பிரசாந்த்

புதிய அரசமைப்பு தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சையிலிருந்து மக்களைத் திசை திருப்புவதற்காகத் தான் சைட்டம் மற்றும் அரிசிப் பிரச்சினைகளுக்கு அரசு இழுத்தடிப்புச் செய்கின்றது என்று தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளரான மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

07 »»»»»

## இலங்கை சிங்கப்பூருக்கிடையில் தடையற்ற வர்த்தக உடன்படிக்கை



இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு இடையிலான தடையற்ற சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இந்த வருடத்திற்குள் கைச்சாத்திடப்படும் என்று சிங்கப்பூர் பிரதமர் லீ ஹிசின் லூங் ( Lee Hsien Loong) நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவுஸ்திரேலியாவுக்கான

07 »»»»»



## விகிதாசார முறையில் ஏப்ரலுக்கு முன் உள்ளூராட்சி தேர்தலை நடாத்தவும்

ஜே.வி.பி தலைவர் வலியுறுத்து

■ அ.அருண் பிரசாந்த்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஏப்ரலுக்கு முன்னர், தற்போது நடைமுறையில் இருக்கும் விகிதாசார முறைப்படி நடத்த வேண்டும் என்று ஜே.வி.பி.யின் தலைவரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவுமான அநுரகுமார திஸாநாயக்க நேற்று அரசை வலியுறுத்தினார்.

அத்தோடு, அரசு இத்தேர்தலை புதிய முறைப்படி நடத்த முற்படுமானால் பல்வேறு

07 »»»»»

## புதிய அரசமைப்பு தொடர்பில் நாட்டு மக்களுக்கு விளக்கம்

25 முதல் மாவட்ட மட்டத்தில் ஆரம்பம்

■ ஆதில் அலி சப்ரி

புதிய அரசியலமைப்பு தொடர்பில் பொதுமக்களை தெளிவுபடுத்தும் மாவட்ட ரீதியான செயற்றிட்டத்தை எதிர்வரும் 25ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்க இருப்பதாக அரசியலமைப்பு குழு உறுப்பினர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு குறித்து கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு

07 »»»»»

# முஸ்லிம்களின் கல்வி, அரசியல் துறைகளை முன்னேற்றியவர் சித்திலெப்பை

## பேராசிரியர் எம்.ஏ. நுஹ்மான்

(எம்.எம்.எம். ரம்ஸீன், இக்பால் அலி)

இலங்கை முஸ்லிம்களின் தற்கால கல்வி மற்றும் அரசியல் துறைகளின் முன்னேற்றத்திற்கு அடித்தளமிட்ட முன்னோடி அறிஞர் சித்திலெப்பை ஆவார் என்று அறிஞர் எம்.சி.சித்திலெப்பைக்கு புகழாரம் சூட்டினார் பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் எம்.ஏ.







நுஹ்மான்.

பேராதனை பல்கலைக்கழக மெய்யியல்துறை முன்னாள் தலைவரும் முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைவருமான கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் எழுதிய முஸ்லிம் அரசியல் முன்னோடி அறிஞர் சித்திலெப்பை நூல் வெளியீட்டு விழா மற்றும் அவர் பற்றிய ஆவணப்படம் இறுவட்டு வெளியீடு என்பன கெட்டம்பே ஒக்ரே ரீஜன்சி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

உலகக்கல்வி மார்க்கக் கல்வி என்ற வித்தியாசமின்றி இஸ்லாமிய அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தில் சகலருக்கும் கல்வி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது முஸ்லிம் சமூகம் அறிஞர் எம்.சி. சித்திலெப்பைக்கு செய்யும் நன்றிக்கடனாகும். இன்றைய இலங்கை முஸ்லிம்களின் கல்வி மற்றும் அரசியல் துறைகளின் முன்னேற்றத்திற்கு அடித்தளமிட்டவர் அறிஞர் எம்.சி. சித்திலெப்பை ஆவார். ஆனால் முஸ்லிம் சமூகம் அறிஞர் எம்.சி. சித்திலெப்பையின் சேவைகள் பற்றி போதியளவில் அறியாத நிலை தொடர்கின்றது. எனவே அன்னாரின் பணிகள் எடுத்துக் கூறப்பட வேண்டும்.

இன்று முஸ்லிம் சமூகம் ஓரளவுக்காவது கல்வி மற்றும் அரசியல் ஆகிய துறைகளில் முன்னேற்றம் அடைந்திருப்பதற்குக் காரணம் அன்று அறிஞர் எம்.சி. சித்திலெப்பை செய்த பணியாகும். அறிஞர் எம்.சி. சித்திலெப்பை வாழ்ந்த காலம் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலமாகும். அன்று முஸ்லிம் சமூகத்தில் சுமார் ஐந்து சதவீதத்தினர் மட்டும் கல்வித்துறையில் முன்னேறியவர்களாக இருந்தனர். இவர்கள் ஆங்கிலத்தையும் கற்று தமது நிலையை மேம்படுத்திக் கொண்டனர் ஆனால் சமூகத்தில் எண்பது சதவீதத்தினர் பொருளாதாரம் மற்றும் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தனர். அறிஞர் எம்.சி. சித்திலெப்பை இந்த எண்பது சதவீதத்தினரின் நிலைமையை மாற்றியமைப்பதற்கு தன்னை அர்ப்பணித்தார்.

உலகில் முஸ்லிம் சனத்தொகையில் அறுபது சதவீதத்தினர் எழுத்தறிவற்றவர்களாவர். கல்வி தொடர்பான தெளிவான நிலைப்பாடு அறிஞர் எம்.சி. சித்திலெப்பையிடம் காணப்பட்டது. அவர் கல்வியை உலகக்கல்வி, மார்க்கக் கல்வி என்று வேறுபடுத்தி நோக்கவில்லை. இஸ்லாமிய அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தில் சகலரும் கல்வி வாய்ப்பை பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்த அவர் பாடுபட்டார்.

இப்பணி அவர் விட்டுச் சென்ற பணியாகும். இதனைப் பற்றி சிந்திப்பது முஸ்லிம் சமூகத்தின் கடமையாகும். எனவே உலகக்கல்வி மற்றும் மார்க்கக்கல்வி என்பவற்றை ஒன்றிணைத்து செல்வது அறிஞர் எம்.சி. சித்திலெப்பையின் பணியைத் தொடர்வதாக அமையும் என்றார்.



கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியனின் ''தமிழில் இசைப்பாடல் வகைகள்'' நூல் அறிமுக விழா கொழும்பு தமிழ் சங்கத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது நூலின் முதற்பிரதியை நிகழ்வுக்கு முன்னிலை வகித்த இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் பேராசிரியர் சபா ஜெயராசாவிடமிருந்து பெறுவதையும் பேராசிரியர் ந.சுப்பிரமணியன், ஞானம் ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரன் மற்றும் நூலாசிரியை ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர்.

(படம் - ஏ.எஸ்.எம்.இர்ஷாத்)

# கிழக்கு மாகாணப் பட்டதாரிகள் 222 பேர் ஆசிரியர்களாக நியமனம்

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கிழக்கு மாகாணத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மேலும் ஒரு தொகுதியினர் ஆசியர்களாக நியமிக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

திங்கட்கிழமை (20) காலை 9.30 மணிக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணி தலைமையில் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நியமனக்கடிதங்கள் வழங்கப்படுமென கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஆசிரியர் நியமனத்திற்காக தேர்வெழுதியவர்களில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 222 பேருக்கு இந்த ஆசிரியர் நியமனங்கள் கிடைக்கின்றன.

இதில் தமிழ் மொழி மூலப் பட்டதாரிகள் 164 பேரும் சிங்கள மொழி மூலப் பட்டதாரிகள் 58 பேரும் நியமனங்களைப் பெறுகின்றனர்.இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் நிலவும் வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினையையும் கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையையும் ஓரளவுக்காவது நிவர்த்திக்க வாய்ப்பேற்பட்டுள்ளதாக முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வேலையில்லா பட்டதாரிகள் கணக்கெடுப்பு கிண்ணியாவில்

(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகளின் கணக்கெடுப்பு நேற்று கிண்ணியா தி /கிண்/அல் அதான் வித்தியாலயத்தில் கிண்ணியா வேலை இல்லா பட்டதாரி சங்கத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமானது.

கிழக்கு மாகாண முதலமைச்சரின் அவசர வேண்டுகோளுக்குகிணங்க கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையில்லா பட்டதாரிகளின் எண்ணிக்கை கணக்கிலெடுகப்பட்டு அவர்களுக்கான வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இக் கணக்கெடுப்பின் போது கலை, வர்த்தக, முகாமைத்துவ, பட்டங்களை முடித்த 500 மேற்பட்ட பட்டதாரிகள் தங்களுடைய விபரங்களை வழங்கினர்.

இப் பட்டதாரிகள் அனைவரும் எவ்வித தொழில் இன்றி பல வருடங்களாக தொழில் தேடுகின்றவர்களாக உள்ளதாக கூறப்படுகிறது.





கண்டி பாரிய நீர் விநியோகத்திட்டத்தின் கீழ் கட்டுகஸ்தோட்டை நீர் வழங்கல் திட்ட வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட நீர் பொருத்திகள் ஆய்வுகூடம் மற்றும் அறிவு பங்கீட்டு நிலையம் ஆகியவற்றை கடந்த வெள்ளிக்கிழமை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும் நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்து வைத்தார். (படம்-ஷபீக் ஹுசைன்)



சுதந்திர தினத்தின் நினைவாக கிரேண்ட் பாஸ் தெற்கு ஐ.தே.க அமைப்பாளர் எச்.ஏ உப்பாலி ஏற்பாட்டில் கிரேண்பாஸ் ஸ்டேஸ் புரவில் வறிய மாணவர்களுக்கு இலவச அப்பியாச புத்தகங்கள் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் வைபவம் நடைபெற்றது. நிகழ்வில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மாணவருக்கு அப்பியாசப்புத்தகங்களை வழங்குவதையும் அருகில் அமைப்பாளர் உப்பாலியையும் படத்தில் காணலாம்.

(படம் - எஸ்.ஏ.கரீம்)

# மனிதன் சுகதேகியாக வாழ்வதற்கு விளையாட்டு, உடற்பயிற்சி முக்கியம்

## கல்விப்பணிப்பாளர் ரணசிங்க

(கலாவெவ நிருபர்)

ஒரு மனிதன் சுகதேகியாக வாழ்வதற்கு விளையாட்டும் , உடற்பயிற்சியும் அவசியமாகும். அவற்றால் தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பு பெற முடிகின்றது. விளையாட்டு வெற்றி தோல்விகளை ஏற்று தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும் சிறந்த பண்பை எமக்கு கற்றுத்தருகின்றது என பலாகல கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.ஜீ.எல்.எஸ்.ரணசிங்க தெரிவித்தார் .

நேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இம்மாதம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பலாகல கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ.எல். எஸ்.ரணசிங்க மேற்கண்டவாறு உரையாற்றினார்.

மேலும் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது,

முஸ்லிம்களின் கலாசாரத்தை பாதுகாத்து அதற்கேற்ற முறையில் இம்மாணவர்களின் நிகழ்ச்சிகள் யாவும் இடம்பெற்றன.இது வரவேற்கத்தக்கது.முஸ்லிம் மாணவர்களில் பெண் மாணவிகள் கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் கூடிய ஆர்வம் காட்டுவதனை காணக்கூடியதாகவுள்ளது.முஸ்லிம் சமூகம் வியாபாரத்துறையில் முன்னிலை வகிக்கின்றார்கள்.இதற்கு ஆண் மாணவர்கள் அதிகம் ஆர்வம் காட்டுவதை அறிய முடிகின்றது. அவர்கள் அதனை அடைய சிறந்த அறிவும் , திறனும் இருக்க வேண்டும். இதனை கல்வித்துறையில் செலுத்தினால் கல்வித்துறையில் பாரிய உயர்ச்சியை அடையலாம். இன்றைய காலத்தில் அதிகமான தொற்றா நோய்களுக்கு முஸ்லிம்கள் ஆளாகியுள்ளவர்கள். அதற்கு முக்கிய காரணம் விளையாட்டும் உடற்பயிற்சியும் போதியளவு இல்லாமையாகும்.

எனவே விளையாட்டுப் போட்டிகள் நடாத்துவது மட்டுமல்ல தேகப்பயிற்சிக்கு முக்கிய இடம் கொடுத்து நோய்களிலிருந்து பாதுகாப்பு பெற வேண்டும். அதிகமான பாடசாலைகளில் அணிநடை ஆண் மாணவர்களால் நடாத்தப்படும் போது இப்பாடசாலையில் பெண் மாணவிகள் அவர்களின் கலாசாரத்தை பாதுகாத்து மிகவும் திறமையான முறையில் அதனை செய்தார்கள். இதிலிருந்து பெண் மாணவிகளின் ஆர்வங்களை எம்மால் காண முடிகின்றது. முஸ்லிம் பெண்கள் அதிகமானோர் ஆசிரிய தொழிலுக்கு ஆர்வம் காட்டுவதுடன் தற்போது வைத்தியர்கள்,சட்டத்தரணிகள் மற்றும் உயர் பதவிகளில் இருப்பதை காண முடிகின்றது. இன்று உலகில் முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் பெண்கள். இப்பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியர் ஒருவர் இல்லாத போதும் பல குறைபாடுகளுடன் இது போன்ற சிறப்பான விளையாட்டுப் போட்டியை நடாத்தியமை பாராட்டுக்குரியது எனவும் தெரிவித்தார்.

# சட்டத்தரணியாக எச்.எம். இம்ஷாட்



(கொச்சிக்கடை ரிஃப்மி)

அனுராதபுர மாவட்டம் கஹடகஸ்திகிலிய பிரதேச செயலகத்திற்குட்பட்ட முகிரியாவ எனும் கிராமத்தைச் சேர்ந்த எச்.எம். இம்ஷாட் உச்சநீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் உயர்தரம் வரையிலான கல்வியை தனது சொந்தக்கிராமத்தில் அமைந்துள்ள முக்கிரியாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் தனது கலைமாணிப் பட்டத்தினை பொருளியல் விஷேட துறையில் பேராதனைப்பல்கலைக்கழகத்திலும் தனது சட்டக்கல்வி கற்கையினை இலங்கை சட்டக்கல்லூரியிலும் நிறைவு செய்தார். இவர் ஹாஸிம், ஆமினா தம்பிகளின் புதல்வராவார்.

# அகில இலங்கை ரீதியில் முதலிடம்



அகில இலங்கை ரீதியிலான இரண்டாம் தேசிய மொழிப்போட்டியில் இப்பாகமுவ கல்வி வலயத்தைச்சேர்ந்த பக்மீகொல்ல அல்மினா முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி எம்.ஆர்.எப்.நூரி அகில இலங்கை மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றார்.

கொழும்பு டி.எஸ். சேனாநாயக்க கல்லூரியில் நடைபெற்ற தரம் 9க்கான மொழிப்பிரயோகம், கிரகித்தலும்

சிங்களப் போட்டியில் பங்குபற்றி அகில இலங்கை மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றதோடு பதக்கத்தையும் சான்றிதழையும் பெற்றுக்கொண்டார். பாடசாலை அதிபர் அஷ்ஷெய்யித் அமானுல்லா மௌலானா பாட ஆசிரியர் ஏ.டபிள்யூ ஜினதாச ஆகியோருடன் வெற்றி பெற்ற மாணவியையும் படத்தில் காணலாம்.

# சட்டத்தரணியாக சரீமா லாஃபிர்

ஹெம்மாதகமையின் முதலாவது சட்டமாணி பட்டப் படிப்புடன்கூடிய சட்டத்தரணியாக சரீமா லாஃபிர் அண்மையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் தனது பாடசாலைக் கல்வியை ஹெம்மாதகமை அல்அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் பெற்றார். உயர்தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டபிட அனுமதியைப் பெற்று சட்டத்தரணியானார். இவர் முஹம்மத் லாஃபிர், பாத்திமா பீபி ஆகியோரின் புதல்வியாவார்.

## பெயர் மாற்றம்

பொத்துவில்-18, குடாக்கள்ளி வீதி, பசறிச்சேனை எனும் முகவரியில் வசிக்கும் **இரத்தின சாமி சித்திர குமாரன்** ஆகிய நான் எனது சுயவிருப்பத்தின் பேரில் புனித இஸ்லாம் மார்க்கத்தைத்தழுவி எனது பெயரை **இரத்தினசாமி அஹமட் அம்ஜித்** என மாற்றிக்கொண்டேன் என்பதை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்து மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன். இதன்பிறகு சகல ஆவணங்களிலும் இரத்தினசாமி அஹமட் அம்ஜித் என கையொப்பமிடுவேன் என உறுதியளிக்கிறேன்.

(இ. அஹமட் அம்ஜித்)

# பிரச்சினைகளை பேசி தீர்க்காவிடின் சிறுபான்மையினருக்கு விடிவே இல்லை

## அக்கரைப்பற்றில் ரவூப் ஹக்கீம்



(எம்.ஏ.றமீஸ்)

சிறுபான்மைச் சமூகமான தமிழ் பேசும் இருசமூகங்களும் தமக்கான பிரச்சினைகளை நாமே பேசித் தீர்க்க முடியவில்லையாயின் நமது பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வே கிடைக்காது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் யுத்தத்தினாலும் இன விரிசல்களினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைக்கான எழுச்சிப் பயண மாநாடு நேற்று(19) அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்விடயத்தினைத் தெரிவித்தார்.

மனித எழுச்சி நிறுவனமும் காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான செயலணியும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் தொடர்ந்தும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் பேசும் இரு தலைமைகளும் நேர்மையாக இருந்து நமக்கான பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் பொருட்டு செயற்பட்டால் எமக்கான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மிக இலகுவில் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். தமிழ் பேசும் இரு சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த தலைமைகளும் ஒரே மேசையில் அமர்ந்து இதய சுத்தியுடன் செயற்பட்டால் நமது பிரச்சினைகளுக்கான தீர்வினை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியும். தமிழ் பேசுகின்ற நமது சமூகத்தில் இருக்கின்ற பிரச்சினைகளுக்கு இன்னுமொரு சமூகத்தினர் வேண்டுமென்று நுழைந்து நமக்காக நியாயம் பேச வருகின்றபோது சில தேவையற்ற பிரச்சினைகள் எழுகின்றன. அவற்றுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. நமது மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் மிகுந்த பக்குவத்துடனும் நியாயமாகவும் நேர்மையாகவும் இருந்து செயற்படுவதோடு, நிருவாக ரீதியாகவும் அரசியல் அதிகார ரீதியாகவும் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளோம். அல்லாது போனால் சர்வதேச நியதிகள் ஊடாகவாவது நமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம். எமது மக்களின் முக்கிய பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் முக்கிய திணைக்களங்கள் தாக்கம் செலுத்துவதை நாம் அறிவோம். அதற்கமைவாக வன பரிபாலன திணைக்களம், வன விலங்கு திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் போன்றவற்றின் செயற்பாடுகள் குறித்து நாம் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தீர்வினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவைப்பாடுகள் உள்ளன.

இதற்கமைவாக இம்மூன்று திணைக்களத்தவர்களுடன் சம்பந்தப்பட்ட பொதுமக்களின் பிரச்சினைகளை தெளிவுபடுத்தும் வகையில் எதிர்வரும் 23ஆம் திகதி பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இருசாரரையும் ஒன்று சேர்த்து தீர்விற்கான பேச்சுவார்த்தையினை ஏற்பாடு செய்திருக்கின்றோம். வில்பத்து விடயத்தினை முடிவிற்குக் கொண்டு வரவேண்டும். அதற்காக இவ்விடயம் பற்றி விமர்சிக்கின்ற தரப்பினரை ஒரே மேசையில் அமர்த்தி இதன் உண்மைத் தன்மைகளை அவர்கள் முன் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. வெறுமனே எமது பக்க நியாயங்களை மட்டும் வைத்துக் கொண்டு ஊடகவியலாளர் மாநாடுகளை நடத்துவதில் எவ்வித தீர்வும் எட்டப் போவதில்லை என்றார்.

## இந்த ஆண்டு முதல்
## GMP சான்றிதழ் கட்டாயம்

உணவு தயாரிப்பு மற்றும் விநியோக நிறுவனங்கள், சுகாதாரத்துக்கு பாதுகாப்பான முறையில் உணவு தயாரிக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் ஜீ.எம்.பி. சான்றிதழை இந்த ஆண்டு முதல் பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக இலங்கை கட்டளைகள் நிறுவனம் கூறியுள்ளது.

தற்போது வரை அதற்கான விண்ணப்பங்கள் சுமார் 40 கிடைத்துள்ளதுடன், அதில் 10 நிறுவனங்களுக்கு அந்த சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பதாக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் டீ.ஜீ.ஜீ. தர்மவர்தன கூறினார்.

எவ்வாறாயினும் உணவு பாதுகாப்புக்கான எச்.ஏ.சி.சி.பி. சான்றிதழை பெற்றுள்ள நிறுவனங்கள், ஜீ.எம்.பி. சான்றிதழை பெற்றுக் கொள்வது கட்டாயமில்லை என்று டீ.ஜீ.ஜீ. தர்மவர்தன மேலும் கூறினார்.

# றிஷாத்தின் முன்மாதிரியை பின்பற்றினால் நிர்வாகப்பணிகள் இலகுவாகும்

## வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு



அதிபர்,ஆசிரியர் இடமாற்றத்திலும் பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகளிலும் தலையிடாதிருக்கும் அமைச்சர் றிசாட்டின் முன்மாதிரியை ஏனைய அரசியல்வாதிகள் முன்னுதாரணமாகக் கொண்டால் பணிகளை இலகுபடுத்த முடியுமென வவுனியா தெற்கு வலய கல்வி பணிப்பாளர் முத்து ராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்கும் அமைச்சர் றிஷாட்டிற்குமிடையிலான கலந்துரையாடல் சாளம்பைக்குளம் அல்-அக்ஸா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்ட கல்விப் பணிப்பாளர் மேலும் கூறியதாவது,

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு பல்வேறு குறைபாடுகளும் பிரச்சினைகளும் இருக்கின்றன. அவற்றை நிவர்த்திப்பதற்கு அமைச்சர் றிஷாட்டும் எமக்கு உதவி வருகின்றார். கல்வி நிர்வாகத்தை சீராக முன்னெடுக்க அதிபர், ஆசிரியர்களின் ஒத்துழைப்பே இன்றியமையாதது. அதிபர்கள் சிறந்த முறையில் செயற்பட்டால் கல்வியை மேம்படுத்த முடியும். பாடசாலை ஆசிரியர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. எல்லாவற்றையும் நாம் தீர்த்து வைக்க முடியாவிடினும் அவர்களின் பிரச்சினைகளை பொறுமையுடன் செவிமடுத்ததாலேயே அந்தப் பிரச்சினைகளில் அரைவாசிதீர்ந்து விட்டதென்ற ஒரு மனநிலை உருவாகும். கல்வி அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கும் அதிபர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகின்றது. சில பாடசாலைகளில் அதிபர்களையும் ஆசிரியர்களையும் இடம் மாற்றுங்கள் என பெற்றோர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் கையொப்பங்களைப் பெற்றுக்கொண்டு எம்மிடம் மகஜர்களைக் கையளிக்கின்றனர். அதே பாடசாலையிலுள்ள அதே அதிபரையோ அதே ஆசிரியரையோ இடம்மாற்ற வேண்டாமென்று அந்தப்பாடசாலை மாணவர்களின் இன்னும் பல பெற்றோர்கள் அதே அளவு கையொப்பத்துடன் கல்வித்திணைக்களத்துக்கு வருகின்றனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இரண்டு மகஜர்களிலும் அங்கேயும் இங்கேயும் மாறி மாறி பெற்றோர்கள் கையொப்பமிடுகின்றனர். இவ்வாறான நிலையில் முடிவெடுக்க முடியாது நாங்கள் தடுமாறுகின்றோம்.

இந்தக் கலந்துரையாடலில் முஸ்லிம் பாடசாலை அதிபர்கள் ஒவ்வொருவரும் தமது பாடசாலையின் அடைவு மட்டம் மற்றும் குறைபாடுகளை விளக்கியதுடன். அமைச்சரிடம் தேவைகள் அடங்கிய அறிக்கையொன்றையும் கையளித்தனர். இங்கு விசேட பாடங்களுக்கான கருத்தரங்குகள், மேலதிக வகுப்புக்கள் நடத்துவது குறித்து ஆராயப்பட்டு அமைச்சரின் பங்களிப்புடன் சில ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

தளபாடப் பற்றாக்குறை, கட்டிட வசதி, சுற்று மதில் அமைத்தல் மற்றும் இன்னோரன்ன குறைபாடுகளை நிவர்த்திப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்.

# உள்நாட்டு அரிசிக்கான உச்ச சில்லறை விலைகள்

கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன், அரிசிக்கான உச்ச சில்லறை விலைகளை (MRP) வர்த்தமானியில் உடனடியாக பிரசுரிக்கும் படி கட்டளை பிறப்பித்துள்ளார்.

அதன் பிரகாரம் வர்த்தமானியில் வெள்ளிக்கிழமை(17) நள்ளிரவு பிரசுரிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு அரிசி வகைகளுக்கான உச்ச சில்லறை விலைகள் கீழே தரப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட நாட்டரிசி - 1 கிலோகிராம் 72 ரூபாய் (மாற்றமில்லை), உள்நாட்டு உற்பத்தி நாட்டரிசி - 1 கிலோகிராம் 80 ரூபாய், இறக்குமதி செய்யப்பட்ட பச்சை அரிசி - கெக்குலு 1 கிலோகிராம் 70 ரூபாய் (மாற்றமில்லை), உள்நாட்டு உற்பத்தி பச்சை அரிசி - கெக்குலு 1 கிலோகிராம் 78 ரூபாய், இறக்குமதி செய்யப்பட்ட சம்பா - (கீரி மற்றும் சூதுரு சம்பா தவிர்ந்தவை) 1 கிலோகிராம் 80 ரூபாய் (மாற்றமில்லை), உள்நாட்டு உற்பத்தி சம்பா - (கீரி மற்றும் சூதுரு சம்பா தவிர்ந்தவை) 1 கிலோகிராம் 90 ரூபாய்

மேலதிகமாக அரிசி இறக்குமதி வந்திருப்பதாகவும் அதனால் அரிசி தட்டுப்பாடு என்ற கேள்விக்கே இடமில்லாமல் போய்விட்டதாகவும் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கூறினார்.அத்துடன் அரிசி இறக்குமதி தொடர்பில் யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை என அமைச்சர் ரிஷாட் பதியுதீன் குறிப்பிட்டுள்ளார்.மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனை குறிப்பிட்டார்.அரிசி குறிப்பிட்ட தொகையில் மாத்திரமே இறக்குமதி செய்யப்படும்.இவ்வாறு இறக்குமதி செய்யும் போதிலே உரிய விலையில் அதனை நுகர்வோருக்கு வழங்க முடியும்.




போதுமான அளவு அரிசி இருக்குமாயின் அரசாங்கம் ஒருபோதும் இறக்குமதிக்கு அனுமதி வழங்காது.

பாவனையாளர்கள் கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக அரிசி விற்பனை செய்யும் வியாபார நிலையங்கள் பற்றி முறைப்பாட்டை செய்ய 1977 என்ற விசேடமாக தொலைபேசி இலக்கம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் நாட்டிலுள்ள அரிசி விற்பனையில் ஈடுபட்டுள்ள வியாபார நிலையங்களை கண்காணிக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 250 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை வருகிறார்
## நரேந்திர மோடி



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் மே மாதம் ஸ்ரீலங்காவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இதனை இந்தியப் பிரதமர் உறுதிப்படுத்தியிருப்பதாக இலங்கை அமைச்சர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தின நிகழ்வுகள் எதிர்வரும் மே மாதம் இலங்கையில் கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அழைப்புகள் விடுக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தின நிகழ்வில் பங்கேற்க எதிர்வரும் மே மாதம் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளவிருப்பதை இந்தியப் பிரதமர் உறுதிப்படுத்தியுள்ளார் என்று பௌத்த சாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு இன்னுமொரு
## சுகாதார சான்றிதழ்

எச்.ஐ.வி. எய்ட்ஸ் வைரஸ் தாயிடமிருந்து குழந்தைக்கு பரவுவதை தடுக்கும் நாடு என்ற வகையில் இலங்கைக்கு இந்த வருட இறுதிக்குள் உலக சுகாதார அமைப்பிடமிருந்து சான்றிதழ் ஒன்று கிடைக்கவுள்ளது.தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு அமைப்பு இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

அதன் பணிப்பாளர், மருத்துவர் சிசிர லியனகே இதுபற்றி கூறுகையில், 2016 ஆம் ஆண்டு இறுதிக்குள் தாய்மார்களில் 95 சதவீதமானர்வள் எயிட்ஸ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்தநிலையில், கியுபா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் தாயிடமிருந்து குழந்தைக்கு எய்ட்ஸ் பரவுவதை தடுத்த நாடுகள் என உலக சுகாதார அமைப்பு பெயரிட்டுள்ளது.

# இதய நோயிலிருந்து சிறுவர்களை பாதுகாக்க லேடி றிஜ்வேயில் லிட்டில் ஹாட்ஸ் திட்டம்



இருதய நோய்களால் பீடிக்கப்படும் சிசுக்களை பராமரிக்க புதிதாக இருதய மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவொன்றை நிர்மாணிக்கும் நோக்கில் லேடி றிஜ்வே மருத்துவமனையின் மருத்துவ அதிகாரிகள் ஒன்றிணைந்து லிட்டில் ஹாட்ஸ் என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக சிசு இருதய மருத்துவ ஆலோசகர் டாக்டர் துமிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இருதய நோய்களால் பீடிக்கப்பட்டு உயிரிழக்கும் சிசுக்களின் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. போதிய மருத்துவ வசதிகள் இன்மையே இந்நிலைமைக்கு காரணமென்றும் நிலைமையை சீர்செய்ய 2000 மில்லியன் ரூபா பெறுமதியான சிகிச்சைப் பிரிவொன்றை நிர்மாணிக்கும் முயற்சியை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

சகல வசதிகளுடனும் கூடிய இருதய மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவொன்றை நிறுவுவதற்கு 2000 மில்லியன் ரூபாய்கள் மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதுவரையில் 79 மில்லியன் ரூபாய்களே கிடைக்கப்பெற்றுள்ளது. கடந்த வாரம் இதற்காக ஒரு பாத யாத்திரையையும் ஏற்பாடு செய்திருந்தோம். அண்மையில் மஹரகமை மருத்துவமனைக்கு பெட் ஸ்கேனர் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்த கதீஜா பவுன்டேஷன் அமைப்பும் இந்த விடயத்தில் எம்மோடு கைகோர்த்துள்ளனர். அவர்களால் முடியுமான உதவிகளைச் செய்வதாகவும் வாக்களித்துள்ளனர். இந்த திட்டத்திற்காக பொதுமக்களிடமும் உதவிகளை எதிர்பார்க்கின்றோம். இதற்காக இலங்கை வங்கியில் லிட்டில் ஹாட்ஸ் என்ற கணக்கையும் ஆரம்பித்துள்ளோம். மக்கள் வங்கி இலக்கம் 79738633 என்ற கணக்கில் எமது நிதியத்துக்கான உதவிகளையும் வைப்பிலிடலாம்.

### தமிழ் பெண்களுக்கு பாலியல் துன்பம்:

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் குற்றச்சாட்டுக்கு இராணுவம் மறுப்பு



தமிழ் பெண்கள் மீது இராணுவ வீரர்களால் பாலியல் துன்புறுத்தல் மேற்கொள்ளப்படுவதாக நல்லிணக்க அலுவலகம் ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையை இராணுவம் மறுத்துள்ளது.

2010ஆம் ஆண்டு வடக்கில் சிவில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், இராணுவத்தினர் சிவில் நடவடிக்கைகளிலிருந்து விலகிவிட்டதுடன், நல்லிணக்க அலுவலகத்தால் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் முழுமையான பொய் என, இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இராணுவ வீரர்கள் பாலியல் துன்புறுத்தல் செயற்பாடுகளில் குற்றவாளிகளாக காணப்பட்டால், அவ்வாறானவர்களுக்கு அதிகூடிய தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ தெரிவித்துள்ளது.

இது குறித்த இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவத்தினால் தமிழ் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் எனும் ஊடக அறிக்கையை இராணுவம் மறுக்கின்றது.

தேசிய நல்லிணக்க அலுவலகத்தின் பிரதானி முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க கடந்த வாரம் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்த கருத்தை மேற்கோள்காட்டி, இராணுவத்தினால் தமிழ் பெண்கள் பாலியல் இம்சைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்று வெளியான ஊடக அறிக்கையை இராணுவம் முற்றாக மறுக்கின்றது.

2010 ஆம் ஆண்டு வடக்கில் சிவில் நிர்வாகம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, இராணுவம் சிவில் நிர்வாக செயற்பாடுகளிலிருந்து விலகிக் கொண்டது என்பதை சுட்டிக்காண்பிக்கின்றோம். இதற்கமைய, தற்பொழுது இராணுவம் எவ்வித சிவில் நிர்வாக நடவடிக்கைகளையும் அங்கு மேற்கொள்வதில்லை. இந்நிலையில், நல்லிணக்க அலுவலக அதிகாரியினால் கூறப்பட்ட பாலியல் துன்புறுத்தல் தொடர்பான கருத்து அடிப்படையற்றதும் உண்மைக்கு புறம்பானதுமான குற்றச்சாட்டு என்பதை மிகவும் கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.பாலியல் தொடர்பான விடயங்களுடன் சம்பந்தப்பட்ட இராணுவ அங்கத்தவர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை சுட்டிக்காட்டுகின்றோம் என இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக அனுமதி:
## கால எல்லை நிறைவு

2016ஆம் வருடத்தில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதிக்காக அனுப்பும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை,இன்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இணைய வழியான விண்ணப்பங்களை மாத்திரம் பெற்றுக் கொள்ள இம்முறை நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், மாணவர்களில் பெரும்பாலானோர் இதுவரை விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதாக அந்த ஆணைக்குழு மேலும் கூறியுள்ளது.

# கீத் நொயார் மீதான தாக்குதல்: மேலும் இரு இராணுவத்தினர் கைது

ஊடகவியலாளர் கீத் நொயார் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு இராணுவப் படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.நேற்று காலை இரண்டு இராணுவப் படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

த நேசன் ஆங்கில பத்திரிகையொன்றின் பாதுகாப்பு செய்தி ஆய்வாளராக கடமையாற்றி வந்த கீத் நோயார் கடந்த 2008ஆம் ஆண்டு இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டிருந்தார். இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

எனினும் தற்போதைய அரசாங்கம் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

இதன் அடிப்படையில் நேற்றுமுன்தினம் மேஜர் ஒருவர் உள்ளிட்ட மூன்று படையினரை குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்திருந்தனர்.இந்நிலையில், நேற்றையதினம் மேலும் இரண்டு படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.இந்த சந்தேக நபர்கள் கல்கிஸ்ஸ நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளனர்.

# பொல்கொல்ல விபத்து; இருவர் பலி

மொஹொமட் ஆஸிக்

கண்டி வத்துகாமம் வீதியில் பொல்கொல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம்(18) இரவு இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கண்டி பிரதேசத்தில் இருந்து வத்துகாமம் பிரதேசத்தை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கில் ஒன்று வத்துகாமம் பிரதேசத்தில் இருந்து கண்டியை நோக்கிச் சென்ற வேன் ஒன்றில் நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.இவ் விபத்தில் கடும் காயங்களுக்கு உள்ளான மோட்டார் சைக்கிலில் வந்துள்ள இரு இளைஞர்களையும் கண்டி வைத்திய சாலையில் அனுமதித்த போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
20TH FEBRUARY 2017 - MONDAY

# சித்திலெப்பையின் அரசியல் சிந்தனைகளில் முஸ்லிம் சமூகத்துக்கு பாடமாக அமையட்டும்

இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சி முன்னோடி அறிஞர் எம்.சி.சித்திலெப்பை என்ற தொனிப்பொருளில் நூல் மற்றும் ஆவணப்பட வெளியீட்டு விழா சனியன்று கண்டி ஓக் ரே ஹோட்டலில் நடைபெற்றது.

சித்திலெப்பை மன்றத்தின் தலைவர் கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் எழுதிய முஸ்லிம் அரசியல் முன்னோடி அறிஞர் சித்திலெப்பை என்ற நூலும், அறிஞர் எம்.சி.சித்திலெப்பையின் உயரிய பணிகளை எடுத்துக்காட்டும் ஆவணப்படமுமே மேற்படி விழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இலங்கையில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் மிகவும் சிக்கலான ஒழுக்க, பண்பாட்டு ரீதியான சவால்களை சந்தித்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் அறிஞர் சித்திலெப்பையின் சமூக, கல்வி, ஆன்மீக பணிகளைப் போன்றே அரசியல், சிந்தனைப் பங்களிப்பை எடுத்துக் காட்டும் வகையில் ''முஸ்லிம் அரசியல் முன்னோடி அறிஞர் சித்திலெப்பை'' என்ற நூல் வெளிவந்திருக்கின்றமை சிறப்பம்சமாகும்.

அறிஞர் சித்திலெப்பை இலங்கை முஸ்லிம்களின் அரசியல் விவகாரங்கள் குறித்து அக்கறையுடன் செயற்பட்டுள்ளார். அவர் முஸ்லிம்களின் அரசியல் பங்கேற்பு குறித்து தீவிரமாக கவனம் செலுத்தியதோடு, சமூகத்தை அரசியல் ரீதியாக வழிநடத்துவதிலும் பங்களிப்பு செய்துள்ளார். சர்வதேச முஸ்லிம்களின் விவகாரங்கள் குறித்தும் பெரிதும் அக்கறை கொண்டிருந்தார்.

அறிஞர் சித்திலெப்பை சமூகத்தின் எழுச்சி என்பது ஒரு துறையில் மட்டும் தங்கியிருப்பதில்லை என்பதை சரியாக உணர்ந்து, கல்வித் துறையில் மறுமலர்ச்சியொன்றை ஏற்படுத்தியதுபோன்றே அரசியல் விவகாரங்களிலும் கருத்துருவாக்கம் செய்தார்.

அறிஞர் சித்திலெப்பையின் அரசியல் சிந்தனை இரு பரிமாணங்களைக் கொண்டிருந்ததை கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் எழுதிய முஸ்லிம் அரசியல் முன்னோடி அறிஞர் சித்திலெப்பை என்ற புத்தகத்தினூடாக எடுத்துக்காட்டியுள்ளார். சித்திலெப்பை தேசிய ரீதியில் நாட்டின் மொத்த மக்களுக்குமான விடுதலையை முன்னிறுத்தி போராடியதோடு, முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உரிமைகளுக்காகவும் போராடியவர்.

இன்றைய முஸ்லிம் அரசியல் கட்சிகள் முஸ்லிம்கள் என்ற தனித்துவ அடையாளத்துடன்கூடிய கட்சிகளை உருவாக்கிக் கொண்டு முஸ்லிம்களுடைய விவகாரங்களில் மாத்திரம் கவனம் செலுத்தி வருவது அறிஞர் சித்திலெப்பை உணர்த்திய அரசியல் கலாசாரத்திற்கு மாறுபட்டதாகும். முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் இந்த நாட்டின் அபிமானமிக்க பிரஜைகள் என்ற வகையில் இலங்கையின் தேசிய பிரச்சினைகளில் பங்கெடுத்து, தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் கைகோர்க்க வேண்டும் என்பதே சித்திலெப்பையின் அரசியல் பாரம்பரியமாகும்.

இலங்கை எதிர்கொண்டுள்ள சமூக, அரசியல், பொருளாதார, சூழலியல் பிரச்சினைகள் அனைத்திலும் முஸ்லிம் அரசியல்வாதிகள், முஸ்லிம் அரசியல் கட்சிகள், பொதுமக்கள் கவனத்தை செலுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

முஸ்லிம்கள் கட்சி அரசியலிலும் இயக்க நடவடிக்கைகளிலும் காட்டும் அக்கறையை விழுமிய அரசியலிலும், பயனுள்ள கல்வியிலும் செலுத்தத் தவறுவதைக் காணலாம். சித்திலெப்பை கல்வியில் ஏற்படுத்திய மறுமலர்ச்சியைப் போன்றே சமூக, தேசிய, அரசியல், சர்வதேச விடயங்களிலும் விழிப்பை ஏற்படுத்தினார்.

1800களின் இறுதியில் சித்திலெப்பை ஏற்படுத்திய சமூக மாற்றங்களில் பெரிதும் பங்காற்றியது ''முஸ்லிம் நேசன்'', பத்திரிகையாகும். இலங்கை முஸ்லிம்களின் ஊடக வரலாறு சித்தி லெப்பை கால அளவு பழைமையானது. அவர் சொந்தமாக அச்சகம் வைத்து, முஸ்லிம் நேசன் பத்திரிகையை வெளியிட்டவர். ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்னரே அவ்வளவு நேர்த்தியாக ஒரு பத்திரிகையை வெளியிட்டுள்ளார். ஆனால் இன்றளவிலும் முஸ்லிம் சமூகத்திடம் சொந்தமான ஓர் அச்சகத்துடன் கூடிய பத்திரிகைகள் இல்லை என்ற குறை காணப்படுகின்றது.

முஸ்லிம் சமூகம் அறிஞர் சித்திலெப்பையின் கல்வி மற்றும் அரசியல் சிந்தனைகளில் போதிய தெளிவைப் பெற்று, தேச நலன்களில் பங்காற்ற வேண்டும். முஸ்லிம் அரசியல் கட்சிகள் தேசிய நீரோட்டத்தில் பயணிக்க வேண்டும். முஸ்லிம் ஊடக நிறுவனங்களை முஸ்லிம் சமூகம் பலப்படுத்த முன்வரவேண்டும்.

அண்மையில் முஸ்லிம் தூதுக்குழுவொன்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாபை சந்தித்தபோது, ''இலங்கை முஸ்லிம்களிடம் பலமான ஊடகமொன்றில்லாத குறை காணப்படுகின்றது. பலமான ஊடகமொன்று கட்டியெழுப்பப்படும் வரையில் முஸ்லிம்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர முடியாது'' என்று தெரிவித்திருந்தார்.

---

# முஸ்லிம்களை அச்சத்தில் ஆழ்த்தும் இலங்கை - இஸ்ரேல் உறவு

எம்.ஏ.முஹம்மட் உவைஸ்

உலகம் பூராகவும் உள்ள முஸ்லிம்கள் அனைவரையும் பலவீனப்படுத்தி அவர்களை அடக்கி ஆளவேண்டும் அழித்தொழிக்க வேண்டும் என்பதே சியோனிச யூதர்களின் ஒரே நோக்காகும். அந்தத் திட்டத்தில் அவர்கள் இப்போதுவரையும் வெற்றியடைந்துகொண்டே வருகின்றனர்.

முஸ்லிம்கள் சியோனிச யூதர்களை விட பெரும்பான்மையினராக இருக்கின்றபோதிலும், சியோனிச யூதர்களின் கை ஓங்கி இருப்பதற்கு காரணம், அவர்களின் நன்கு திட்டமிட்ட அடிப்படையிலான செயற்பாடுதான். முஸ்லிம்களுக்கிடையே பிளவு, முஸ்லிம் மற்றும் மாற்று இனங்களுக்கிடையே மோதல் என்ற தலைப்புகளைக் கையில் எடுத்துக்கொண்டே அவர்கள் முஸ்லிம்களை மிகவும் இலகுவாக அழித்து வருகின்றனர்.

மத்திய கிழக்கு முஸ்லிம்களின் ராஜ்யமாகும். உலகத்தையே ஆட்சி செய்த அந்த மண் மீண்டும் அவ்வாறு மாறிவிடக் கூடாது என்பதற்காக அந்த நாடுகளை திட்டமிட்ட அடிப்படையில் அழித்து வருகின்றனர் சியோனிச யூதர்கள்.

முஸ்லிம்களிடம் காணப்படுகின்ற ஷீயா - சுன்னி பிளவுகளையும், அரசியல் ஒற்றுமையின்மையையும் பயன்படுத்தி மத்திய கிழக்கு நாடுகள் சியோனிச யூதர்களால் அழிக்கப்படுகின்றன. சிரியா, ஈராக், யெமன், லிபியா, பலஸ்தீன் உள்ளிட்ட பல நாடுகளை அவர்கள் சிதைத்துவிட்டனர். அந்த நாடுகளால் மீள எழும்ப முடியாதவாறு சதிகள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

மேலும் பல முஸ்லிம் நாடுகளை யூதர்கள் கைக்குள் போட்டுக்கொண்டுள்ளனர். ஐ.எஸ் போன்ற பயங்கரவாதக் குழுக்களை உருவாக்கி தொடர்ச்சியான அரசியல் ஸ்திரமற்ற தன்மையை அவர்கள் தக்க வைத்துக்கொண்டு வருகின்றனர்.

இதுபோக, முஸ்லிம் நாடுகளுக்கு வெளியே வாழும் முஸ்லிம்களை பலவீனப்படுத்தும் - அழிக்கும் நடவடிக்கைகளையும் அவர்கள் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றனர். முஸ்லிம் அல்லாத நாடுகளில் வாழும் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படும் அத்தனை இனவாதக் குழுக்களின் பின்னால் இருப்பவர்கள் சியோனிச யூதர்கள்தான்.

அந்த அமைப்புகளுக்கு பணம் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் சியோனிச யூதர்களே மறைமுகமாக வழங்கி வருகின்றனர். அந்த செயற்பாடுகளினால் அந்த நாட்டின் எந்த அரசியல்வாதிகள் பயன்பெறுகின்றார்கள் யாரெல்லாம் நன்மையடைகின்றார்கள் என்றெல்லாம் சியோனிச யூதர்கள் பார்ப்பதில்லை. அவர்களுக்குத் தேவை முஸ்லிம்களின் அழிவு மட்டும்தான்.

இதனால், பணமும் அரசியல் இலாபமும் கிடைப்பதால் அரசியல்வாதிகள் சியோனிச யூதர்களின் பிடியில் சிக்குகின்றனர். இந்தியா மற்றும் மியன்மார் போன்ற நாடுகள் இதற்கு சிறந்த உதாரணமாகும். சியோனிச யூதர்களின் சதி கடந்த காலங்களில் இலங்கையிலும் அரங்கேரத் தொடங்கியது.

பொது பல சேனா தோற்றம் பெற்றபோது காலியில் அவர்களுக்கு அலுவலகம் ஒன்றை அமைத்துக் கொடுத்ததே ஒரு யூதர்தான் என்பதை நாம் அறிவோம். சியோனிச யூதர்களின் - இஸ்ரேலின் பிரசன்னம் இலங்கைக்குள் அதிகரித்தால் முஸ்லிம்கள் எதிர்பார்த்திராத திசைகளில் இருந்தெல்லாம் அழிவைச் சந்திப்பர் என்பதை உணர்ந்ததால்தான் இஸ்ரேலின் - சியோனிச யூதர்களின் வருகையை நாம் கடுமையாக எதிர்த்து வருகின்றோம்.

ஆனால், இந்த அரசு மிக இலகுவாக சியோனிச யூதர்களுக்கான வழியைத் திறந்துவிடும் என்ற அச்சம் இப்போது ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியானது அமெரிக்காவையும் இஸ்ரேலையும் ஆதரித்துப் போகக்கூடிய ஓர் அரசாகும். மஹிந்தவோ இதற்கு எதிரானவர்.

இலங்கை முஸ்லிம்களுக்காக ஐ.தே.க அரசு ஒருபோதும் இஸ்ரேலைப் பகைத்துக்கொள்ளாது என்பதை சமீபத்தில் நாம் கண்டோம். பலஸ்தீனில் அமைக்கப்பட்டு வரும் சட்டவிரோத குடியிருப்பை நிறுத்துமாறு கோரி ஐக்கிய நாடுகள் சபையில் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டபோது, அது தொடர்பிலான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது இலங்கை அரசு நடுநிலைமை வகித்ததை நாம் கண்டோம்.

இதன்மூலம் இஸ்ரேலுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இலங்கை அரசு வெளிப்படுத்தியது. இது தொடர்பில் இலங்கை முஸ்லிம்கள் தெரிவித்து வந்த அதிருப்தி அடங்குமுன், இன்னொரு காரியம் நடைபெற்றுள்ளது. அதாவது, அந்த சட்டவிரோத குடியிருப்பின் நிர்மாணத்தின் பின்னணியில் இருக்கும் மோசே சப்தி என்ற கட்டடக்கலை நிபுணரை, இலங்கை கட்டடக் கலை நிபுணர் நிறுவனம் இலங்கைக்கு அழைத்து வந்துள்ளது.

இலங்கையில் இடம்பெறவுள்ள கட்டடக்கலை கண்காட்சியில் கலந்து கொள்வதற்காக அந்த இஸ்ரேலியருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது முஸ்லிம்களின் மனதை மேலும் புண்படுத்தும் ஒன்றாக அமைந்துள்ளது. அது மாத்திரமன்றி, இஸ்ரேலுடனான - சியோனிச யூதர்களுடனான இலங்கை அரசின் அதிகரித்துச் செல்லும் உறவானது இலங்கை முஸ்லிம்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

இலங்கை அரசு, அதாவது ஐக்கிய தேசிய கட்சி வெளிநாட்டு முதலீட்டை பெறுதல் என்ற பெயரில் - சர்வதேச உறவைப் பலப்படுத்துதல் என்ற பெயரில், எல்லை மீறிச் செல்கின்றது என்றே தெரிகின்றது. இஸ்ரேல் போன்ற நாடுகளுடன் - யூதர்களுடன் இந்த அரசு ஏற்படுத்திக்கொள்ளும் உறவானது, உண்மையில் ஆரோக்கியமான உறவாக அமையாது. அரசுக்குத் தேவையானதைக் கொடுத்து முஸ்லிம்களை அழிக்கும் நடவடிக்கையில்தான் இந்த உறவு போய் முடியும்.

முஸ்லிம்களை அழிப்பதற்காக இஸ்ரேல் எதையும் செய்யும். ஆனால், இந்த அரசோ வெளிநாட்டு முதலீடு கிடைக்கின்றது எனறால் எதைச் செய்வதற்கும் தயாராக இருக்கின்றது என்பதை உணர முடிகின்றது. அரசு இதைத் தவிர்க்க வேண்டும்.

இஸ்ரேலின் - சியோனிச யூதர்களின் குணத்தை, முஸ்லிம்கள் மீதான அவர்களின் நிலைப்பாட்டை அறிந்திருந்தும் இந்த அரசு இஸ்ரேலுடனான உறவைப் பலப்படுத்துவது ஏன் என்ற கேள்வி எழுகின்றது. அது பலத்த சந்தேகத்தைக் கிளப்புகின்றது.

முஸ்லிம்களுக்கு எதிரான சியோனிச யூத இனவாதத்துக்கு இந்த அரசு இடம் கொடுக்கப் போகிறதா என்ற கேள்வியை இன்று எல்லா முஸ்லிம்களும் எழுப்பத் தொடங்கியுள்ளனர். இனவாதத்தை நம்பி அரசியல் அநாதையானவர்களுக்கு சிறந்த உதாரணம்தான் மஹிந்த ராஜபக்ஷ. சிறுபான்மை இன மக்களை ஒதுக்கி தனிச் சிங்கள வாக்குகளால் தனது அரசியல் வாழ்வை நிலை நிறுத்துவதற்காக எடுத்த முயற்சியில் படுதோல்வியடைந்து, இப்போது துவண்டு போய்க் கிடக்கின்றார் அவர்.

அவரது ஆட்சிக் காலத்தில் தமிழர்களுக்குப் போன்று முஸ்லிம்களுக்கும் கொடுமை இழைக்கப்பட்டதை, நாம் அறிவோம். யுத்த வெற்றியால் கட்டி எழுப்பப்பட்ட அவரது ஆட்சி பின்னர் மெல்ல மெல்ல ஆட்டங்காணத் தொடங்கியதும், அதைச் சரி செய்வதற்கு மஹிந்த எடுத்த ஆயுதம்தான் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம்.

சிங்கள மக்கள் மத்தியில் சரிந்து கொண்டு சென்ற அவரது செல்வாக்கை, இந்த இனவாத செயற்பாடுகளின் ஊடாகக் கட்டியெழுப்ப முடியும் என்று அவர் தப்புக்கு கணக்குப் போட்டார்.

இந்தியாவில் நரேந்திர மோடியை பின்பற்றிய முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத செயற்பாட்டை ஒட்டிய செயற்பாட்டை மஹிந்த தேர்ந்தெடுத்தார். அங்குள்ள ஆர்.எஸ்.எஸ். மதவாதக் குழுக்கள் போன்றே இங்கும் மத, இனவாதக் குழுக்கள் உருவாகின. எந்தவித அடிப்படையும் இன்றி முஸ்லிம்களுக்கு எதிராக இந்தக் குழுக்கள் பிரச்சினைகளைக் கிளப்பின.

உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படும் ஹலால் சான்றிதழில் இருந்து பிரச்சினைகள் தொடங்கப்பட்டன. அதை அடிப்படையாக வைத்துக் கொண்டே நாடு பூராகவும் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பிரசாரங்கள் - தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மேலும் பல தலைப்புக்கள் வெறுப்புப் பிரச்சாரத்துக்கு விடப்பட்டன. முஸ்லிம் பெண்கள் அணியும் அபாயா, மற்றும் புர்காவுக்கு எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டன. சில இடங்களில் அபாயா அணிந்து சென்ற பெண்கள் தாக்குதலுக்கும் தூற்றுதலுக்கும் உள்ளாகினர்.


நாட்டில் உள்ள பல பள்ளிவாசல்கள் கல் வீச்சுக்கு இலக்காகின. புதிதாகக் கட்டப்படும் பள்ளிவாசல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீதான தாக்குதலையும், அந்தப் பள்ளிவாசல் பலவந்தமாக மூடப்பட்டதையும் நாம் மறக்கவில்லை.

இதனால் முஸ்லிம்கள் தொழுவதற்காக பள்ளிவாசல்களுக்கு செல்வதற்கும் அஞ்சினர். அதிலும், இரவு நேரத் தொழுகைக்குச் செல்லாமல் எத்தனையோ முஸ்லிம்கள் வீடுகளிலேயே தொழுதனர்.

மத்ரஸாக்களில் பயங்கரவாதம் கற்பிக்கப்படுகின்றது என்று பிரசாரம் செய்யப்பட்டது அவற்றை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. முஸ்லிம்களின் வர்த்தகத்தின் மீதும் குறி வைக்கப்பட்டது. முஸ்லிம்களின் கடைகளில் சிங்களவர்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடாது என்றும், முஸ்லிம்களின் வர்த்தக நிறுவனங்களில் சிங்களவர்கள் தொழில் புரியக்கூடாது என்றும் பிரசாரம் செய்யப்பட்டது. முஸ்லிம்களின் ஆடை வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

இவ்வாறு மஹிந்தவின் ஆட்சியில் இடம்பெற்ற இனவாதத் தாக்குதலை புள்ளிவிவரங்களுடன் சொல்லிக் கொண்டே போகலாம். இந்தத் தாக்குதல்களின் உச்சக்கட்டமாகத்தான் அளுத்கம தர்கா நகர் கலவரம் இடம்பெற்றது.

இவை மஹிந்த ஆட்சியில் இடம் பெற்றவையாகும். ஆனால், இந்த அரசு இஸ்ரேலுடன் - சியோனிச யூதர்களுடன் ஏற்படுத்தும் உறவானது இதைவிடவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்பதை, இந்த அரசு உணர வேண்டும். அவர்கள் பேரழிவை இந்த நாட்டில் ஏற்படுத்திவிடுவார்கள். ஆகவே, இந்த விவகாரத்தை அரசு தூர நோக்குடன் நோக்க வேண்டும். சியோனிச யூதர்களை இலங்கைக்கு அழைப்பதையும் அவர்களுடன் கொஞ்சிக் குலாவுவதையும் அரசு உடன் நிறுத்த வேண்டும்.


மோசே சப்தி





# விவசாய காணிகள் அபகரிப்பு
# றொட்டவெவ மக்கள் அவதி

* அப்துல்சலாம் யாசீம்
- திருகோணமலை

திருகோணமலை மாவட்டத்தில் மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவிற்குற்பட்ட றொட்டவெவ கிராம மக்கள் கடந்த யுத்தத்திற்கு முன்னர் விவசாயங்களை மேற்கொண்டு வந்த சின்ன புளியங்குளம் மற்றும் பெரிய புளியங்குளம் ஆகிய விவசாயக்காணிகளில் விவசாயத்தினை மேற்கொள்வதற்கு அனுமதியைப் பெற்றுத்தருமாறு வன பரிபாலன திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த யுத்தத்திற்கு முன்னர் 20 வருடங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டு வந்த இவ் விவசாயக்காணிகளை 1990ம் ஆண்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையிலும் மேற்கொண்டு வந்ததாகவும் அதனையடுத்து அரச முற்படையினரும் இந்த பகுதிகளுக்குச்செல்ல வேண்டாம் என தெரிவித்ததாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நாட்டின் அமைதியான சூழ் நிலை உருவாகியதையடுத்து றொட்டவெவ விவசாய சங்கத்தினால் சின்ன புளியங்குளம் மற்றும் பெரிய புளியங்குளம் ஆகிய இரு குளங்களையும் புனரமைத்து தருமாறு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியதையடுத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசினால் புனரமைப்பு செய்யப்பட்டது.

இக்குளங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் கமநெகும. மகநெகும திட்டத்தின் கீழ் 60 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகையில் இக்குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டதாகவும் றொட்டவெவ விவசாய சம்மேளனம் தெரிவிக்கின்றது.

அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய கிராமமான மிரிஸ்வெவ கிராமத்தில் 50ற்கும் மேற்பட்ட வீடுகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. அக்கிராமத்தின் ஊடாக சின்ன புளியங்குளம் மற்றும் பெரிய புளியங்குளம் செல்லும் விவசாய வீதியென கூறி புனரமைப்பு செய்யப்பட்டதாகவும் அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

விவசாய வீதி என பெயர் சூட்டப்பட்ட சின்ன புளியங்குளம் மற்றும் பெரிய புளியங்குளம் வீதியால் தற்போது விவசாய நிலங்களுக்கு செல்ல முடியாத நிலையில் இருப்பதாகவும்

தாம் வியர்வை சிந்தி பசி வயிற்றுடன் தண்ணீரையும் புளியம் பழத்தையும் சாப்பிட்டு விட்டு வரம்புகளை போட்டு விவசாயம் செய்து வந்த இந்த காணிகளில் விவசாயத்தை செய்ய விடாது வன பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் தடுத்து வருவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாட்டில் அமைதி நிலவி வருகின்ற நிலையில் யாரிடமும் கையேந்த தேவையில்லை என நினைத்துக்கொண்டு அரசாங்கத்தினால் புனரமைப்பு செய்யப்பட்ட குளங்களுக்கு உட்பட்ட காணிகளை விவசாயம் செய்வதற்கு பொதுமக்கள் துப்பரவு செய்வதற்காக சென்றபோது வன பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

றொட்டவெவ சின்ன புளியங்குளம் பெரிய புளியங்குளம் விவசாயக்காணிகள் தொடர்பில் திருகோணமலை மாவட்ட அரசியல்வாதிகளிடம் பல தடவைகள் தெரியப்படுத்தியும் எவ்வித பலனும் கிடைக்காத பட்சத்தில் நல்லாட்சி அரசு தாங்கள் சுயமாக விவசாயத்தை மேற்கொள்வதற்கு தாம் மேற்கொண்டு வந்த இவ்விவசாய காணிகளை வன பாதுபாதுகாப்பு அதிகாரிகளின் அடாவடியிலிருந்து பெற்றுத்தருமாறும் விவசாயமக்கள் நல்லாட்சி அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அத்துடன் றொட்டவெவ கிராமத்தில் 400 குடும்பங்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து வரும் இந் நிலையில் இக்காணிகளை செய்ய விடாமல் தடுத்தமையை அடுத்து இக்கிராமமக்கள் தொழிலின்றி குடும்பங்களை விட்டு விட்டு கொழும்பு கண்டி போன்ற இடங்களுக்கு தொழில் தேடி சென்று வருவதாகவும் குடும்பப்பெண்கள் பிள்ளைகளின் கல்வி கலாச்சாரம் மற்றும் மருத்துவத்தில் பின் விளைவுகளையும் மிகவும் கஷ்டங்களை தாம் எதிர் நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

தாம் இரத்தத்தினால் வியர்வை சிந்தி தங்கள் பிள்ளைகள் சிறப்பாக வாழ வேண்டும் என்ற நோக்குடன் இரவு பகல் பாராமல் பசி பட்டனியுடன் காத்து வந்த இந்த சின்ன புளியங்குளம் பெரிய புளியங்குளம் விவசாயக்காணிகளை விவசாயிகளுக்கு நல்லாட்சி அரசாங்கத்தில் இம்முறையாவது விவசாயத்தினை மேற்கொள்ள அனுமதியைப்பெற்று இக் காணிகளை பகிர்ந்தளிக்க வேண்டுமென விவசாயிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்கட்சி தலைவரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# தொல்பொருள் ஆய்வுகளால்
# முஸ்லிம்களுக்கு தொல்லையா?

எஸ்.சுபைர்தீன்
செயலாளர் நாயகம்
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

அண்மையில் பாராளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) பாராளுமன்ற உறுப்பினரால் - (பிமல் ரத்னாயக்க) கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்த கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் வடக்கு, கிழக்கில் 759 தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இனம் காட்டப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதில் அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் 423 இடங்களை குறிபார்த்துள்ளனர். இதே நேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 இடங்களும், மன்னார் மாவட்டத்தில் 60 இடங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 136 இடங்களும், புத்தளம் மாவட்டத்தில் 40 இடங்களும் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள 423 இடங்களும் அநேகமாக முஸ்லிம் பிரதேசங்களை மையமாக



கக் கொண்டே இடம்பெற்றிருக்கும் என யூகிக்க முடியும். ஏனெனில், அம்பாறை மாவட்டத்தில் சிங்களப் பிரதேசங்களில் வாழும் மக்களில் அதிகமானோர் இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னர் குடியேற்றப்பட்டவர்கள் ஆவர். ஆனால், முஸ்லிம் பிரதேசங்களில் வாழும் மக்கள் பரம்பரைப் பூர்வீகக் குடிகளாக உள்ளனர். எனவே, தொல்பொருள் ஆய்வு மையங்கள் முஸ்லிம் பிரதேசங்களை இலக்காகக் கொண்டே அமையலாம். இது அம்பாறை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் குடியேற்றங்களுக்கு ஆபத்தாக அமைந்து, முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேற்றப்படுவார்களா? என்ற அச்சத்தை எழுப்புகின்றது.

சில மாதங்களுக்கு முன்பு நடைப்பெற்ற அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரும், ஐ.தே.க. பொருளாளருமான தயாகமகே அவர்கள் கல்முனையில் இருந்து பொத்துவில் வரையுள்ள 12000 ஆயிரம் ஏக்கர் நிலமும் சிங்களவர்களுக்கே உரித்தானது என்று கூறிய கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் இந்த தொல்பொருள் ஆய்வு மையங்கள் அமையப்போகின்றனவா? என்ற சந்தேகமும் முஸ்லிம்கள் மத்தியில் எழுந்துள்ளது. இதைப்பற்றி அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களும் மௌனம் சாதிப்பது ஏன்? என்பது விளங்கவில்லை.

அம்பாறை மாவட்டம் 43‰ முஸ்லிம்களையும் 39‰ சிங்களவர்களையும் 18‰ தமிழர்களையும் கொண்டுள்ளதாகும். இச்சிங்கள மக்களை 39‰ மாக அதிகரிப்பதற்கு - 1960 ஆம் ஆண்டுகளில் அம்பாறை மாவட்டத்தை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து, பிரித்து தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டபோது சிங்களவர்களை மிகப் பெரும்பான்மையாகக்கொண்ட பதுளை மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த வெவகம் பற்று, பிந்தன்னைப்பற்று பிரதேசங்கள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதும், அதனைத் தொடர்ந்து நுணுக்கமாகச் செய்யப்பட்ட சிங்களக் குடியேற்றங்களுமே காரணமாகும்.

சனத்தொகையில் 43.41‰ முஸ்லிம்களாக இருந்தாலும் முஸ்லிம்களுக்கு உள்ள நிலம் 7‰ இற்கு குறைவானதே ஆகும் என்ற விபரீத உண்மையை இங்கு குறிப்பிட விரும்புகிறோம். இந்த விபரீத உண்மையை அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர்களும் அறியாதிருப்பது அதைவிட ஆச்சரியமானதாகும் - சிந்திக்காத சமுதாயம் சிறப்புப் பெற முடியாது

வடமாகாணத்தில் இருந்து 1990 களில் பாசிசப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை தடுக்கும் முகமாக இப்பொழுது பேரினவாதிகளால் தொல்பொருள் இடங்களாக இனங்காட்டியிருக்கும் இடங்கள் (மன்னார் 60,புத்தளம் 40) அமையப் போகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் இனங்காட்டப்பட்டுள்ள 40 தொல்பொருள் இடங்களும் அங்குள்ள முஸ்லிம்களை இடம்பெயரச் செய்து அதன் மூலம் முஸ்லிம் சனத்தொகைப் பரம்பலை கட்டுப் படுத்தும் மறைமுக முயற்சியா என்பதும் சந்தேகமாகவே உள்ளது. எதிர் காலத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிந்தித்து செயற்படாவிட்டால் இதனை விட பெரிய விளைவுகள் (மியன்மார் போல்) ஏற்படலாம் என்பதை பதிவு செய்து வைக்க விரும்புகிறோம்.

புத்தளம் தேர்தல் தொகுதியில் இருந்து பிரித்து புதிதாக 1976 ல் உருவாக்கப்பட்ட ஆனமடுவ என்ற தேர்தல் தொகுதி புத்தளத் தொகுதியை விடவும் இரண்டு மடங்கு கூடிய நிலப்பரப்பைக் கொண்டுள்ளது என்பதை குறிப்பிடும் அதே நேரத்தில், புத்தளம் தொகுதியின் நிலப்பரப்பு அதிகமாக கடல், ஏரிகளைக் கொண்ட நிலப்பரப்பாகவே உள்ளது.

கிழக்கு மாகாணத்தை நோக்கும்போது அங்குள்ள மூன்று மாவட்டங்களில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இரு மாவட்டங்களினதும் மொத்த நிலப்பரப்பை விடவும் அம்பாறை மாவட்டத்தின் நிலப்பரப்பு கூடியதாக இருப்பதைக் காணலாம். திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூன்று தேர்தல் தொகுதிகளிலும்; திருகோணமலை, மூதூர் ஆகிய இரண்டு தேர்தல் தொகுதிகளின் நிலப்பரப்பை விட அடுத்த தேர்தல் தொகுதியான சேருவிலவின் நிலப்பரப்பு ஏறக்குறைய இரண்டு



மடங்கு பெரிதாகவுள்ளதோடு, மாவட்ட மக்கள் தொகையில் 28.8 வீதமான மக்களையே அது கொண்டுள்ளது.

இதே நேரத்தில், மூதூர் தொகுதியின் நிலப்பரப்பு திருகோணமலை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய 20 வீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. மேலும் மூதூரை விட நான்கு மடங்கு அதிகமான நிலப்பரப்பைக் கொண்ட சேருவில தொகுதியின் ஜனத்தொகை மாவட்ட ஜனத்தொகையின் 30 வீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. சேருவிலவை விட கூடிய ஜனத்தொகையைக் கொண்ட மூதூர் தொகுதியின் ஜனத்தொகை மொத்த மாவட்ட ஜனத்தொகையில் 35‰ அதிகமாக இருக்கும் நிலையில்- சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சேருவிலையின் பரப்பளவுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மூதூர் தொகுதியின் நிலப்பரப்பு 4:1 என்ற விகிதத்திலேயே உள்ளது என்ற மாபெரும் சமமின்மையை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மூதூர் தொகுதி கிண்ணியா - மூதூர் என்ற இரு பிரதேச சபைகளையும், கிண்ணியா நகரசபையையும் கொண்டுள்ளது. இதே நேரத்தில் சேருவில தேர்தல் தொகுதி பதவி - சிறிபுர, கோமரங்கடவெல, மொரவெவ, தம்பளகமுவ, கந்தளாய், சேருவில, வெருகல் என்ற ஏழு பிரதேச சபைகளைக் கொண்டுள்ளது என்று கூறும் பொழுது இந்த இரண்டு தொகுதிகளுக்குமிடையிலான ஏற்றத் தாழ்வுகளைக் காணலாம்.

இதே நேரம், மூதூர் தொகுதி, கிண்ணியா மூதூர் என இரண்டு பிரதேச செயலகங்களைக் கொண்டுள்ளது. ஏறக்குறைய 67 ஆயிரம் முஸ்லிம் மக்களைக் கொண்ட கிண்ணியாவுக்கு ஒரு D.S பிரிவு கொடுக்கப்பட்டிருக்கும் போது, சேருவில தொகுதியில் அமைந்துள்ள கோமரங்கடவெலயில் 7500 மக்களுக்கு தனி ஒரு D.S பிரிவு ஒதுக்கப்பட்டுள்ளமை எவ்வளவு பெரிய பாரபட்சம் என்பது புலனாகின்றது.

இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால் சேருவிலயில் உள்ள கோமரங்கடவெல (7500), மொரவெவ (8000), பதவி - சிறிபுர (12000), சேருவில (14000), வெருகல் (11500) ஆகிய இந்த ஐந்து D.S பிரிவுகளின் மொத்த ஜனத்தொகை 53000 ஆக இருக்கும் நிலையில் கிண்ணியா D.S பிரிவின் ஜனத்தொகை 67000 க்கு குறைவாகவே உள்ளது.

மூதூர் தொகுதி , கிண்ணியா - மூதூர் என்ற இரண்டு D.S. பிரிவுகளை உள்ளடக்கியதாக 125000 முஸ்லிம் மக்களைக் கொண்டுள்ளது.

**இது சம்பந்தப்பட்ட மேலும் விவரங்கள் பின் தொடரும்..........**

# வவுனியா குப்பைகளை மீள் சுழற்சிப்படுத்தும் திட்டத்திற்கு 200 மில்லியன்

## அமைச்சர் ரிஷாத் ஒதுக்கீடு

(சுஐப் எம்.காசிம்)

வவுனியா பம்பைமடு பிரதேசத்தில் தொடர்ச்சியாகக் கொட்டப்பட்டு வரும் குப்பைகளால் அந்தப்பிரதேசத்தில் வாழும் மக்களின் பாதிப்பைக் கருத்திற்கொண்டு குப்பைகளை மீள் சுழற்சி செய்து உரமாக்கும் திட்டத்திற்கு அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் முயற்சியால் ரூபா 200 மில்லியன் ஒதுக்கப் பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வேண்டுகோளுக்கிணங்க உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா இந்த நிதி ஒதுக் கீட்டை வழங்கியுள்ளதாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கமலேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா பம்பைமடுவில் குப்பைகள் குவிந்து கிடக்கும் மேட்டுப் பிரதேசத்திற்கு கடந்த வெள்ளியன்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் வவுனியா மாவட்ட அரச அதிகாரிகள் சகிதம் களத்துக்கு விஜயம் செய்த அமைச் சர் ரிஷாட் பதியுதீன் நேரில் நிலைமைகளை ஆராய்ந்தார்.

வவுனியா மாவட்டத்தில் சேரும் அன்றா டக் குப்பைகள் இந்த இடத்தில் தொடர்ந்தும் கொட்டப்பட்டு வருவதால் நாங்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றோம். துர் நாற்றம் எழுவதால் சுவாசிக்க முடியாது பெரிதும் சிரமப்படுகின்றோம். இதனால் சுகா தாரப் பிரச்சினைகள் ஏற்பட்டு நோய்களுக்கு ஆளாக வேண்டி நேரிடுகின்றது. எனவே இந்தக் குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுங்கள் இவ்வாறு சாளம்பைக்குளம் மற்றும் அயற் கிராம மக்கள் அமைச்சர் ரிஷாட்டிடம் மீண்டும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனைச் செவிமடுத்த அமைச்சர் உயர் அதிகாரிகளுடன் களத்திலே நின்று நடாத்திய ஆலோசனையின் பிரகாரம் குப்பை மேட்டுக்கு அப்பால் உள்ள 10 ஏக்கர் நிலத் தில் மீள் சுழற்சி மேற்கொள்ளும் செயற்திட் டத்தை மேற்சொன்ன நிதியொதுக்கீட்டில் ஒரு வருட காலத்துக்குள் நடைமுறைப்ப டுத்துவதென முடிவெடுக்கப்பட்டது. அதன் மூலம் வவுனியா மாவட்டக் குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு கூட்டுப் பசளையாக்கும் திட் டத்தை மேற்குறிப்பிட்ட நிதியொதுக்கீட்டில் ஒரு வருட காலத்துக்குள் பூர்த்தி செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் குறிப்பிட்ட காணியை விடு வித்தல், சூழல் ஆய்வு அறிக்கை பெறுதல், தொழில்நுட்ப உதவி மற்றும் மாகாண சபை அமைச்சுடன் இந்த திட்டத்திற்கான ஒருங்கிணைப்புப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சம்பந்தப் பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்ப டைத்தார். சுமார் ஒரு வாரத்துக்குள் இந்த பணிகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் பணித்தார். தற்போது குப்பை கொட்டப்பட்டு வரும் இடத்துக்கு மாற்றீடாக தற்காலிகமாக வேறு இடங்களை பயன்படுத்தலாமா என ஆலோசிக்குமாறும் அமைச்சர் வேண்டினார்.

அத்துடன் குப்பைகள் கொட்டும் இடத் துக்கருகாமையில் அமைக்கப்பட்டு கடந்த 2 வருடங்களாக மூடப்பட்டுக்கிடக்கும் மனிதக் கழிவுகளை உரமாக்கும் பொறிமுறைத்தொகு தியைப் பயன்படுத்த வேண்டியதன் அவசி யத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

# 10 மத்தியஸ்த சபைகளுக்கு 736 பேர் விண்ணப்பிப்பு

## பெண்களும் அதிகளவில் ஆர்வம்

(ஏறாவூர்ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

அம்பாறை மாவட்டத்தில் 10 மத்தி யஸ்த சபைகளுக்கு 736 பேர் விண்ணப் பித்திருப்பதாகவும் மத்தியஸ்தர்களாக பணியாற்றுவதில் பெண்களும் அதிகள வில் ஆர்வம் காட்டுவதாகவும் மத்தியஸ்த சபையின் மட்டக்களப்பு அம்பாறை பிராந் தியத்துக்கான பயிற்சி அலுவலர் முஹம் மத் இஸ்மாயில் முஹம்மத் ஆஸாத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை நகரம், உஹன, இறக்காமம், சம்மாந்து றை, கல்முனை, சாய்ந்தமருது, அட்டா ளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலய டிவேம்பு, பொத்துவில், ஆகிய பிரதேச ங்களில் இயங்கி வந்த மத்தியஸ்த சபைகளின் பதவிக்காலம் முடிவடைந் துள்ளதால் புதிய மத்தியஸ்த சபை குழாம் நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சைகள் இடம்பெற்று முடிவுறும் தருவாயில் உள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் இறுதி நேர்முகப் பரீட்சை பொத்துவில் மத்தி யஸ்த சபைக்காக நாளை இடம்பெற வுள்ளது. எல்லா மத்தியஸ்த சபைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் 30 சதவிகி தமாக இருக்கும் வகையில் பெண் உறுப் பினர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப் பட்டுள்ள ஆண் பெண் இரு பாலாரும் 5 நாட்கள் கொண்ட உட்களப் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் அதிலிருந்து எழுத்து மூல தேர்வில் சித்தியடைபவர்கள் மத்தியஸ்தர்களாக நியமிக்கப்படுவார்கள். இந்த நியமனம் அம்பாறை மாவட்டத்தில் வெகு விரைவில் இடம்பெறும் என்றும் அவர் மேலும் கூறினார்.

நீதியமைச்சின் கீழ் இயங்கும் மத்தி யஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் மூன்றாண்டுகள் என்கின்ற பதவிக் காலத் தின் அடிப்படையில் பிரதேச மத்தியஸ்த சபைகள் நியமிக்கப்படுகின்றன. விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அவற்றின் பதவிக்காலம் வறிதாக்கப்படுகின்றன.

# கண்டியில் பிறந்த எம்.ஜி.ஆருக்கு அங்கேயே விழா எடுப்பது மகிழ்ச்சியே

## துணைத்தூதுவர் ராதா வெங்கட் ராமன்



(குருநாகல் இக்பால் அலி)

எம்.ஜி.ஆர் வெறும் நடிகர் மட்டுமல்ல அரசி யல் துறையில் ஈடுபட்டு தம் பெயரை தமிழ் உலகமெங்கும் உயர்த் திக் கொண்டவர். அவரு டைய திரைப் படங்கள், பாடல்கள் என்றும் இற வாமல் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. கண்டியில் பிறந்த எம். ஜி. ஆருக்கு கண்டி மக்கள் விழா எடுப்பது வரவேற்கத்தக்க அம்ச மாகும் நான் அதற்கு சாட்சியாக இருப் பேன் என்று கண்டி இந்திய துணைத் தூது வர் ராதா வெங்கட்ராமன் தெரிவித்தார்.

மலையக கலை , கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் நூறாவது ஜனன தின நிகழ்வு கண்டி புஸ்பதான மண்டபத்தில் சங்கத் தின் தலைவர் ராஜா ஜேகின்ஸ் தலைமை யில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி இந்திய துணைத் தூதுவர் ராதா வெங்கட் ராமன் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வில் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான எம். ரி. எம் முத்தலிப், எஸ் இராஜரட்ணம் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கொலைக் குற்றத்திற்காக ஐவருக்கு மரண தண்டனை

(குருநாகல் இக்பால் அலி)

ஹசலக்க வராபொல பிரதேசத்தில் கடந்த 22 வருடத்திற்கு முன்பதாக நபர் ஒருவரை அடித்து கொலை செய்தும் மற்றுமொரு நபரை அடித்து பலத்த காயத்துள்ளாக்கிய சம்பவங்கள் தொடர்பிலான வழக்கு விசாரணையில் குற்றவாளியாக இனம் காணப்பட்டுள்ள ஐவருக்கு கண்டி மேல் நீதிமன்ற நீதவான் யூ.பி. கரலியத்த கடந்த வெள்ளியன்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

மேலும் குறித்த ஐவருக்கும் மற்றுமொரு குற்றச் சாட்டின் அடிப்படையில் தலா ஒரு வருக்கு 10 வருடமாக 50 வருடத்துக்கு சிறைதண்டனை விதித்தும் மேற்படி நீதவா னினால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஹசலக்க வராபொல பிரதேசத்தில ஏற்பட்ட கலவரத்தின் போது ஒருவரை கொலை செய்துள்ளமை மற்றும் மற்று மொருவரை கொலை செய்ய எத்தனித் துள்ளமை போன்ற மூன்று குற்றச் சாட்டுகளின் பேரில் குற்றவாளிக்கு எதிராக இடம்பெற்ற வழக்கு விசாரணையின் அடிப் படையில் இவ்வாறு குற்றவாளிகளுக்கு கண்டி மேல் நீதிமன்றத்தினால் மரண தண் டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

# சாய்ந்தமருதுவில் மஸ்ஜிதுஸ் ஸஹாபா பள்ளிவாசல் திறந்து வைப்பு



(சாய்ந்தமருது யூ.கே. காலித்தீன்)

சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலா பீடத்தில் குர்ஆன் மனன கற்கையில் ஈடுபட்டுள்ள ஹிப்ழு மாணவர்களுக்காக எம்.எப்.சி.டீ. நிறுவனத்தால் நிர்மாணிக் கப்பட்ட ஸஹாபா எனப் பெயர் சூட்டப் பட்ட பள்ளிவாசல் கடந்த சனிக்கிழமை ளுஹர் தொழுகையுடன் திறந்துவைக்கப் பட்டது.

கலாபீடத்தின் தலைவர் அல் - ஹாஜ் மௌலவி. யூ.எல்.எம்.காஸிம் (கியாதி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்மா பள்ளி வாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர் வை.எம். ஹனீபா மற்றும் எம்.எப்.சி.டீ. மாவட்ட இணைப்பாளரும் , இக்கலாபீடத்தின் பிரதித் தலைவரு மாகிய சட்டத்தரணி என்,எம், முஜீப் (நளீ மி) ஆகியோரால் திறந்துவைக்கப்பட்டது.

இப்பள்ளிவாசல் நிர்மாணிப்பு தொடர் பில் இங்கு முஜீப் (நளீமி) கருத்துத் தெரி விக்கையில்,

இப்பள்ளிவாசலின் நிர்மாணப் பணி கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஒரு சில எதிர்ப்புகள் தோன்றியிருந்தது. காரணம் அருகில் ஒரு பள்ளிவாசல் இருக்கத்தக் கதாக அதன் அருகில் இன்னுமொரு பள்ளிவாசல் தேவையில்லை என்ற ரீதியி லேயாகும். ஆகையால் இது தொடர்பில் எமது அமைப்பானது சுமார் ஓர் ஆண்டுக்கு மேலாக இதனை நிர்மாணிப்பது தொடர் பில் ஆராய்ந்து இறுதியிலேயே இதனை அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

ஹிப்ழு கற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர்கள் வெறுமனே குர்ஆனை மாத்திரம் கற்றுவிட்டு செல் பவர்கள் அல்லர். பொதுவாக பள்ளி வாசல்களில் ஹாபிழ் களை கண்டால் அவர்களை இமாமாக தொழுவிக்கும்படி அழைப்பது வழமை. ஆனபடியால் அவர் கள் குர்ஆனை கற்பதுடன் மாத்திரம் நின்றுவிடாமல் முறையான தொழுவித் தல் பயிற்சிகளில் ஈடுபடுதல் அவசியமா கின்றது.

ஆகையால் இனிமேலும் இது தொடர் பான வீண் தர்க்கங்களில் ஈடுபடுவதை விட்டும் தவிர்ந்து அல்லாஹ்வின் மாளி கையை உயிரூட்டும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அனைவ ரையும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது தஃவா இஸ்லாமியா கலாபீடத்தின் நிர்வாகிகள், சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்மா பள்ளி வாசல் நம்பிக்கையாளர் சபையி னர், எம்.எப்.சி.டீ. நிறுவன உத்தியோகத் தர்கள், கலாபீட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பிரமு கர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# 20 மில்லியன் செலவில் மருத்துவ உபகரணங்கள்



(பைஷல் இஸ்மாயில்)

சுகாதாரத்துறையை முன்னேற்றுவதே எனது நோக்கமாகும். இத்துறையை முன்னேற்றுவதன் மூலம் எமது மக்களும், எமது நாடும் சிறந்ததொரு வளமிக்க நாடாக சிறந்து விளங்கும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமே இல்லை என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முஹம்மட் நஸீர் தெரிவித்தார்.

தெஹியத்தக்கண்டி ஆதார வைத்திய சாலைக்கான உடற்பயிற்சிப் பிரிவு,எண் டஸ்கோப் பிரிவு,சீ.எஸ்.எஸ்.டி பிரி வு, மருத்துவ ஆய்வுகூடம் போன்ற பிரிவுகளை கையளிக்கும் நிகழ்வுடன் இந்த பிரிவுகளுக்கு 20 மில்லியன் ரூபா நிதியில் மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

கிழக்கு மாகாணத்தில் பின்தங்கிக் காணப்படும் பிரதேசங்களிலுள்ள வைத் தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பல முன்னெடுப்புக்களை முன்னெடுத்து வருகின்றேன். அதற்கான சகல உதவிகளையும் எமது நல்லாட்சி அரசு வழங்கி வருகின்றது. அந்த வகை யில் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பின்தங்கிக் காணப்படும் வைத்தியசாலை களுக்கு பல வசதிகளை பல மில்லியன் ரூபாய்களை செலவு செய்து வருகின் றேன்.

அதுமாத்திரமல்லாமல், இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட கட்டிடங்களுக்கான சகல மருத்துவ உப கரணங்களையும் வழங்கி வருகின்றோம். எமது நாடும், எமது மக்களும் சிறந்த தேக ஆரோக்கியமுள்ளவர்களாகவும், சிறந்த வளமுள்ள நாடாகவும் திகழ வேண்டும் என்ற ஒரே நோக்கமாகும். அதற்காக பல பில்லியன் ரூபாய்களை எமது அரசு செலவு செய்தும், செய்யவும் தயாராகவுள்ளது என்பதை நான் கூறிக் கொள்வதில் பெருமிதமடைகின்றேன் என்றார்.

# ஹபுகஸ்தலாவையில் அகாஸ் கிராமம் திறப்பு விழா




(ஹபுகஸ்தலாவை நிருபர்)

ஹபுகஸ்தலாவையில் வாழும் வறிய குடும்பங்களுக்கு மேர்சி லங்கா நிறுவ னத்தின் சிபார்சின் அடிப்படையில் குவைட் நாட்டைச்சேர்ந்த ஜொமால் நாசர் அப்துல்லாஹ் மற்றும் அவரது குடும்பத்தினர்களால் ஏற்படுத்தப்பட்ட 14 வீடுகள் கொண்ட அகாஸ் கிராமத் தின் திறப்பு விழாவும் தெரிவு செய் யப்பட்ட 14 வறிய குடும்பங்களுக்கு வீடுகள் கையளிக்கப்பட்ட நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

மேற்படி திறப்பு விழாவுக்கு ஹபுகஸ்த லாவை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளித் தலைவர் எஸ்.எச்.ரஹ்மான் தலைமை யில் நடைபெற்ற இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக குவைட் நாட்டைச்சேர்ந்த ஜொமால் குடும்பத்தினர்,கௌரவ அதிதி யாக பணிப்பாளர் மற்றும் இவ்வமைப் பின் அதிகாரிகள், உலமாக்கள்,பொது மக்கள் ஆகியோரும் கலந்துகொண்ட னர். அகாஸ் கிராமம் திறப்பு விழா நிகழ்வில் வீடமைப்புத்திட்டத்தை அமைத்துக்கொண்டு ஜொமல் நாசர் அப் துல்லாஹ்வுக்கும் மேர்சி லங்கா நிறுவன பணிப்பாளருக்கும் நினைவு சின்னங்கள் கொடுத்து கௌரவிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

# வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



(எம்.முஹம்மட் ஜபீர்-சவளக்கடை)

லெமென் ஹாவெஸ்ட் என்ரபிறைசஸ் நிறுவனத்தின் கல்வி மேம்பாட்டு வேலைத் திட்டத்தின் கீழ் நற்பிட்டிமுனை லாபீர் வித் தியாலயத்தில் கல்வி கற்கும் 180 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசலை கேட்போர் கூடத்தில் நடைபெற் றது.

இந்நிகழ்வு நற்பிட்டிமுனை லாபீர் வித் தியாலயத்தின் அதிபர் வை.எல்.ஏ.வஸீர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் லெமென் ஹாவெஸ்ட் என் ரபிறைசஸ் நிறுவனத்தின் தலைவர் வைத் தியர் எம்.ஐ.இப்றாஹிம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கற்றல் உபகரணங்களை மாணவர்களிடம் வழங்கி வைத்தார்.

இதன்போது கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆரம்பக் கல்விப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் வை.எல்.கே.தாஸீம், லெமென் ஹாவெஸ்ட் என்ரபிறைஸ் நிறுவனத்தின் பணிப்பளார் ஐ.எம்.நிப்றாஸ், லெமென் ஹாவெஸ்ட் என்ரபிறைசஸ் நிறுவனத்தின் முகாமையாளர் ஏ.ஆர்.எம். நஸீர், லெமென் ஹாவெஸ்ட் என்ரபிறைஸ் நிறுவனத்தின கணக்காளர் ஜே.எம்..பாஸித், லெமென் ஹாவெஸ்ட் என்ரபிறைசஸ் நிறுவனத் தின் நிர்வாக உத்தியோகத்தர் வீ.றுஸ்தி, கல்வி மேம்பாட்டுத் திட்ட பணிப்பாளர் ஐ.எம்.சப்றாஸ், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



பேருவளையிலிருந்து திருவிழாவொன்றுக்கு கடல் மார்க்கமாக களுத்துறை வந்த படகொன்று கவிழ்ந்ததில் விபத்துக்குள்ளானவர்கள் சிகிச்சை பெற்றுவரும் பேருவளை வைத்தியசாலைக்கு பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக விஜயம் செய்து பார்வையிடுவதை படத்தில் காணலாம். (படம்- பேருவலை பி.எம்.முக்தார்)

## ஜனாதிபதி, பிரதமருடன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தினம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட தரப்பினருடன் விசேட சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார்.

அந்தவகையில், பொருளாதார மூலோபாயங்கள் மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கடந்த சனியன்று இலங்கைக்கு வருகை தந்த இவர், இன்றைய தினம் காலை 11. 30 மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும், அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான தமிழர் முற்போக்குக் கூட்டணியுடனும் விசேட பேச்சுக்களில் ஜெய்சங்கர் ஈடுபடவுள்ளார்.

இவை முடிவுற்ற பின்னர் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்து கலந்துரையாடி, மாலை 4.30 மணியளவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தரப்பினரையும் இவர் சந்திக்கவுள்ளார்.

இந்த முக்கியமான கலந்துரையாடலில் சம்பூர் அனல் மின்நிலையத் திட்டம், இரு நாடுகளுக்குமான பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பில் ஜெய்சங்கர் பேச்சு நடத்துவார் என்று எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது.

## களுத்துறை படகு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பேர் உயிருடன் மீட்கப்பட்டு நாகொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வருடா வருடம் களுத்துறையில் நடைபெறும் கத்தோலிக்க திருவிழாவில் கலந்துகொள்ள மீனவர்கள் கடல் மார்க்கமாக வருவது வழக்கம். இம்முறையும் மேற்படி திருவிழாவில் கலந்துகொள்ள தொடராக வந்த 19 படகுகளில் ஒன்றே இவ்வாறு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

படகில் அதிகமான சிறுவர்கள் மற்றும் பெண்கள் இருந்துள்ளனர். மீட்புப் பணியில் கடற்படையினர் ஈடுபட்டு வருவதாகவும் உயிரிழந்தவர்களின் வீதம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

உயிரிழந்தவர்கள் பேருவளை மற்றும் நாகொடை மருத்துவமனை பிணவறைகளில் வைக்கப்பட்டுள்ளனர். பேருவலை வைத்தியசாலையில் 9பேரின் சடலங்களும் நாகொடை வைத்தியசாலையில் 4 சடலங்களும் வைக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்களின் விபரங்கள் பத்திரிகை அச்சுக்கு செல்லும்வரை வெளியாகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹெம்மாதகம நீர்விநியோக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஹெம்மாதகமை குடிநீர் வழங்கல் திட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர திட்டமிடல் நீர்வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவர்களின் அழைப்பின்பேரில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்ப வேலைகளை கடந்த சனியன்று(18) தொடங்கி வைத்தார்.

நேதர்லாந்து நாட்டின் நிதியுதவியுடன் அமையப்பெற்றுள்ள இத்திட்டத்தின் மூலம் ஹெம்மாத்தகமை, மாவனல்லை மற்றும் ரம்புக்கனை ஆகிய பிரதேசங்களிலுள்ள சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் பாவனையாளர்கள் நன்மையடையவுள்ளனர்.

இத்திட்டத்திற்கு 2016 ஆம் ஆண்டு அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் அமைச்சரவை பத்திரம் சமர்பிக்கப்பட்டு நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான நேதர்லாந்து தூதுவர், அமைச்சர்களான கபீர் ஹாசிம், ஹரின் பெணான்டோ, பிரதியமைச்சர்களான ரன்ஜன் ராமநாயக்க, சம்பிக்க பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்களான நலீன் பண்டார, துசித, சுஜித் சன்ஜயா, ஆனந்த அலுத்கமகே, சந்தித் சமரசிங்க, முன்னாள் அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## நாட்டின் பல...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பார்க்கப்படுவதுடன், குறிப்பாக தென் கடற் பிராந்தியத்தில் காற்றின் வேகம் மணிக்கு 80 கிலோமீற்றர்கள் வரை அதிகரிக்கலாம் என்றும் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், மேற்கு, சப்ரகமுவ, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களில் சுமார் 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி இடம்பெறக்கூடும். மட்டக்களப்பிலிருந்து - பொத்துவில் வரையில் ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை ஊடாக பலப்பிட்டிய வரையான ஆழ் கடல் பிரதேசமும் ஆழமற்ற கடல் பகுதியிலும் கடல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அவதானத்துடன் செயற்பட வேண்டும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இலங்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்துவிட்டு நாடு திரும்பும் வழியில் கடந்த 17ஆம் திகதி இரவு சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ளார்.

இதன்போது இரண்டு பிரதமர்களும் கலந்துகொண்ட இரவு விருந்துபசாரத்தின் போது இது தொடர்பில் பேசிக் கொண்டதாக சிங்கப்பூர் பிரதமர் தனது பேஸ்புக் பக்கத்தில் தகவல் வெளியிட்டுள்ளார். இலங்கைக்கு வருமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க தனக்கு அழைப்பு விடுத்திருப்பதாகவும் சிங்கப்பூர் பிரதமர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான தடையற்ற வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.தடையற்ற வர்த்தக உடன்பாடு குறித்த பேச்சுவார்த்தை கடந்த ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டதாக சிங்கப்பூர் வர்த்தக தொழில் அமைச்சர் ஈஸ்வரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தம்புள்ளை பள்ளிக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தம்புள்ளையில் தற்போதுள்ள பள்ளிவாசலை அங்கிருந்து அகற்றி நகர சந்தைக்குப் பின்னாலுள்ள ஒரு காணியில் 20 பேர்ச் ஒதுக்கித் தர முடியும் என கடந்த வாரம் அமைச்சர் சம்பிக்க ரனவக்க தம்புள்ளை முஸ்லிம் பள்ளிவாசல் சபைப் பிரதிநிதிகளை கொழும்புக்கு அழைத்து அறிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியிலேயே தொழுகை மடுவத்துக்கு காணி வழங்கக்கூடாதென ஒரு இலட்சம் கையொப்பங்களை திரட்டும் இயக்கம் நேற்று நகரில் ஐந்து பிரதான இடங்களில் ஆரம்பித்து வைத்தது. பௌத்த பிக்குகள் மற்றும் வெள்ளை நிற ஆடையணிந்த இளைஞர்கள் இந்த கையொப்பம் திரட்டும் நிகழ்ச்சியில் ஈடுபட்டிருந்தனர்.

பொருளாதார மையம், பஸ் நிலையம், சந்தை, கடிகாரச் சந்தியருகே, கெக்கிராவ பஸ் நிலையம் ஆகிய இடங்களிலேயே கையொப்பங்கள் திரட்டப்பட்டன.

ரங்கிர தம்புள்ள உரிமை என்ற இயக்கமே இந்த நடவடிக்கையை முன்னெடுத்தது.

இதேநேரம் நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் வியாபாரிகளுக்கான இறுதி எச்சரிக்கை எனக் குறிப்பிட்டு துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

வியாபாரம் செய்வதென்றால் வியாபாரம் செய்யுங்கள். இல்லையெனில் பள்ளி. அப்படியில்லாவிடின் உங்களுக்கு ஒன்றுமில்லாமல் போகும் என் அந்த பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் அமைப்பதற்கு 20 பேர்ச் காணியை வழங்குவதற்கு ரங்கிரி தேவாலய விகாரையின் அதிபதி ராஹுல தேரரும் இணக்கம் தெரிவித்திருந்தார்.

முஸ்லிம் தரப்பில் பள்ளிவாசலுக்கு மேலதிகமாக தற்போதுள்ள பள்ளிவாசலைச் சுற்றி வாழும் 15 முஸ்லிம் தமிழ் சிங்களகுடும்பங்களுக்கும்காணிஒதுக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் 20 பேர்ச் காணி வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் நாளை தம்புள்ளை நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிங்கள மக்கள் ஒன்றுகூடல் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு ஒத்திப்போடப்பட்டுள்ளதாக தம்புள்ளை உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம் அறிவித்துள்ளது.

பள்ளிவாசலுடன் இந்துக் கோவில் ஒன்றைக் கட்டுவதற்கும் நிலம் ஒதுக்கப்படும் என அமைச்சர் சம்பிக்க ரனவக தெரிவித்திருந்தார்.

## உள்ளூராட்சி தேர்தல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தேர்தலில் யானை சின்னத்தின்கீழ், நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் ஜாதிக ஹெல உறுமய போட்டியிட்டது.நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, 2015 ஜீலை மாதம் 05 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான இந்தக் கூட்டணயில் ஏழு கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் போட்டியிட்ட இந்தக் கூட்டணியில் 106 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விகிதாசார முறையில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுவிடயம் தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

நாட்டிலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் 2015, மார்ச் மாதத்திலேயே காலாவதியாகிவிட்டன.

இவ்வாறு இரண்டு வருடங்கள் கடந்துள்ளபோதிலும் இத்தேர்தல் இன்னும் இடம்பெறாமல் இருப்பதற்கு எதோ ஒரு காரணம் இருக்கும் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

மஹிந்த காலத்தில் பசில் ராஜபக்ஷவினால் செய்யப்பட்ட எல்லை நிர்ணயங்களுக்கு மாற்றீடாக தற்போது புதிதாக எல்லைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்கள் தொடர்பில் ஒரு தெளிவில்லாத தன்மையே காணப்படுகின்றது.

அதாவது, 5002 தொகுதிகள், 30 விகிதாசார உறுப்பினர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விகிதாசார முறைப்படி 25 வீத ஒதுக்கீடு பெண்களுக்கு வழங்கப்படுவதால் 2168 பெண் உறுப்பினர்களும் 1051 ஆண் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவார்கள். இப்படி மொத்தமாக 8,671 உறுப்பினர்கள் புதிய முறைப்படி தெரிவு செய்யப்படுவார்கள். இதனால், தற்போது காணப்படும் 5248 என்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் பார்க்கும் போது 3423 உறுப்பினர்கள் அதிகரித்துள்ளார்கள். அதாவது, 10 உறுப்பினர்கள் இருந்த இடத்தில் 17 உறுப்பினர்களும் 20 பேர் இருந்த இடத்தில் 32 பேரும் என 60 வீதத்தால் உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. அப்படியானால் தற்போது இருக்கும் கட்டிடங்களை விட பெரியக் கட்டிடங்கள் தேவைப்படுகின்றன. இவற்றை மீண்டும் இடித்துக் கட்ட வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரம் ஒருபுறமிருக்க, புதிய முறையில் தேர்தல் நடத்துவதாயின் 52 தொழில்நுட்ப திருத்தங்களை நிச்சயமாக முன்வைத்தே ஆக வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஏனெனில், புதிய தேர்தல் முறைப்படி ஒரு தொகுதியில் சிறுபான்மையாக வாழும் மக்கள் அதிகமாக பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. முஸ்லிமக்களோ தமிழர்களோ அதிகளவாக வாழும் பிரதேசத்தில் ஒரு முஸ்லிம் பிரதிநிதியோ அல்லது தமிழ் பிரதிநிதியோ வெற்றிபெற்றால், அடுத்ததாகவும் தோல்வியுற்ற ஒரு முஸ்லிம் பிரதிநிதி அல்லது தமிழ் பிரதிநிதியேத்தான் தெரிவு செய்யப்படுவார்கள். இது இன்னொரு இனக்குழுவைப் பெரிதும் பாதிக்கும். இவ்வாறு உலகில் எந்தத் தேர்தல் முறைமையிலும் இல்லாத பல பிரச்சினைகள் இந்த புதிய தேர்தல் முறைமையில் இருக்கின்றது. இதனை நாமும் பல தடவைகள் சுட்டிக்காட்டிவிட்டோம்.

இவற்றை நிவர்த்தி செய்வதாயின் நீண்ட காலம் செல்லும். அதுவரை தேர்தலை நடத்தாமல் இருப்பது முறையல்ல என்பதால், இந்தத் தேர்தலை மட்டும் தற்போது நடைமுறையில் இருக்கும் விகிதாசார முறைக்கிணங்க, ஏப்ரலுக்கு முன்னர் நடத்த வேண்டும் என்று அரசை நாம் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## புதிய அரசமைப்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் பொதுமக்களை தெளிவுபடுத்தும் செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு அநுராதபுரத்தில் இடம்பெறவுள்ளதாகவும் அதன் பின்னர் ஏனைய மவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசியலமைப்பு தொடர்பாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க நியமித்திருந்த ஆறு குழுக்களின் அறிக்கைகளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாட்களில் இதுதொடர்பான பாராளுமன்ற விவாதங்கள் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கின்றோம்.

அரசியலமைப்பு தொடர்பில் பொதுமக்கள் அறிவூட்டப்படுவது அவசியமாகும். இதுதொடர்பாக 25 மாவட்டங்களுக்கும் செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இம்மாதம் 25ஆம் திகதி அநுராதபுரத்தில் ஆரம்பித்து ஏனைய 24 மாவட்டங்களிலும் மக்களை தெளிவுபடுத்தவுள்ளோம். மார்ச் மாத இறுதிக்குள் பொதுமக்களை தெளிவுபடுத்தும் செயற்றிட்டத்தை நிறைவுசெய்யவுள்ளோம்.

## கேப்பாப்பிலவு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்திலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

ஐக்கிய சோசலிசக் கட்சியினரின் ஏற்பாட்டினால் கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னிலையில் நடைபெறவுள்ள கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், அரசியல்வாதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மாணவர் அமைப்பினர் என பலரும் கலந்து கொண்டு தொடர்போராட்டத்தில் ஈடுபடும் கேப்பாப்பிலவு மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அன்றைய தினமே யாழ்ப்பாணத்திலும் இதுவிடயம் தொடர்பில் போராட்டம் நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் கிராமிய உழைப்பாளர் இயக்கமும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இதில், தெற்கிலிருந்தும் ஏராளமான பொதுமக்கள் உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் கலந்து கொள்வார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டங்களில் கேப்பாப்பிலவு மக்களின் காணிகள் எந்தவித நிபந்தனைகளுமின்றி வழங்கப்படல் வேண்டும், இவ்விடயத்தில் தாமதம் செய்யாது துரித நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்படவுள்ளன.

தமது காணிகளில் தம்மை மீள்குடியேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி கேப்பாப்பிலவு மக்கள் கடந்த 20 நாட்களாக தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அக்காணிகளுக்கு முன்னிலையில் கூடாரங்களை அமைத்தும், சமைத்து உண்டும் இரவு பகலாக இந்த போராட்டம் தொடர்வதால் அரசுக்குள்ளும் இதுகுறித்து பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இக்காணிகளில் வனஜீவராசித் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளும் இருப்பதால் தான் இதுவிடயத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று அரச தரப்பிலிருந்து காரணங்கள் கூறப்பட்டாலும், இவற்றையும் மீறிய ஏதோ ஒரு முக்கியமான விடயம் இந்தக் காணிகளில் இருக்கின்ற காரணத்தினால் தான் காணிகளை விடுவிக்க அரசு தயக்கம் காட்டுகின்றது என மக்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இப்போராட்டத்தில் ஈடுபடுவோரை இராணுவத்தினர் புகைப்படங்கள் எடுப்பதால் இந்த கேப்பாப்பிலவு விவகாரத்தின் பின்னணியில் ஏதோ ஒரு விடயம் இருக்கின்றது என்ற சந்தேகம் மேலும் மேலும் வலுக்கின்றது என தமிழர் தரப்பிலிருந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இவ்விடயத்தில் தொடர்ச்சியாக தீர்வில்லா ஒரு சர்ச்சை இருக்கின்ற நிலையிலேயே நாளை மறுதினம் தலைநகரிலும் யாழிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

## அரசமைப்பு சர்ச்சையிலிருந்து...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அதாவது, புதிய அரசமைப்பொன்றை உருவாக்கி அதனை திருட்டுத் தனமாக நிறைவேற்றுவதற்கே இந்த அரசு தற்போது முயற்சித்து வருகின்றது.

ஏனெனில் சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, புதிய அரசமைப்புத் தொடர்பில் ஒரு வார்த்தைக் கூட சட்டமூலத்தில் அச்சிடப்படவில்லை என்று ஒரு கருத்தையும் பாராளுமன்ற உறுப்பினரான ஜயம்பதி விக்கிரமரத்ன சகல பணிகளும் முடிவடைந்துவிட்டன. அடுத்த சில நாட்களிலேயே ஜனாதிபதியிடம் சட்டமூலம் கையளிக்கப்படும் என்று இன்னொரு கருத்தையும் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு ஒரே கட்சிக்குள்ளே இரு வேறு கருத்துக்கள் வந்து கொண்டிருக்கும் நிலையில், சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லமாட்டோம் என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரும் செல்வோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியினரும் தெரிவித்து புதிய அரசமைப்புத் தொடர்பில் அரசுக்குள் கருத்து முரண்பாடுகள் இருப்பதை வெளிக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

எம்மைப் பொறுத்தவரை அரசு இந்த அரசமைப்பு விடயத்தில் எதையோ பெரிதாக மறைக்கின்றது என்றே தெரிகின்றது.

அதாவது, ஏற்கனவே அரசமைப்பு தொடர்பில் அரசு நகல் பிரதியொன்றை தயார் செய்து வைத்துவிட்டது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த குழப்பங்களிலிருந்து மக்களை திசைதிருப்புவதற்காகத் தான் அரசி, சைட்டம் என புதுப் புதுப் பிரச்சினைகளை அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இல்லாவிட்டால் இந்த விவகாரங்கள் எல்லாம் எப்போதோ முடிவுக்கு வந்திருக்கும். எனவே, அரசு இதுதொடர்பில் மக்களுக்கு தெளிவானதொரு நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

## 80 பேர்ச் காணி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ. எச்.எம். அஸ்வர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

தம்புள்ளைப் பள்ளிவாசலை வேறு இடத்துக்கு கொண்டு செல்வதற்குத் தேவையான போதிய இடவசதிகளை பள்ளிவாசல் நிர்வாகிகள் கேட்டிருப்பது குறித்து தற்பொழுது பள்ளிவாசலுக்குச் சொந்தமான 18 பேர்ச்சஸ் காணியை விட ஓர் அங்குலமேனும் மேலதிகமாகத் தரமுடியாது என அமைச்சர் பாட்டலி சம்பிக ரணவக கூறியிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த விடயம் மரத்தால் விழ்ந்தவனை மாடு மிதிப்பது போன்ற ஒரு செயலாகும். ஏனெனில், பிரச்சினைக்கு உட்படுத்தப்பட்ட தம்புள்ளைப் பள்ளிவாசலை அன்றிலிருந்து அகற்றுவதற்கு இந்த அரசாங்கத்தின் கீழ் இணங்கிய பள்ளிவாசலின் தர்மகர்த்தாக்களுக்கு இடி விழும் செய்தியாக தரப்பட்டிருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷவினுடைய ஆட்சியின் கீழ் பல இடையூறுகள் பள்ளிவாசலுக்கு நேர்ந்துள்ளதாக அன்று பலர் குற்றம் சாட்டினார்கள். ஆனால், அனைவருக்கும் சாதாரண நீதியைச் செலுத்துவோம் என முஸ்லிம்களுடைய பூரண ஆதரவுடன் தழைத்து வந்த இந்த நல்லாட்சியின் உறுப்பினராகிய அமைச்சர் சம்பிக ரணவக இப்படிக் கூறி இருப்பது கண்டிக்கத்தக்கது.

மஹிந்த ஆட்சியில், பிரதம அமைச்சராக இருந்த டி.எம். ஜயரத்ன, தம்புள்ளைப்பள்ளியை இடமாற்றம் செய்து போதுமான இடவசதி உள்ள காணிகளைத் தருவதாகவும் இடமாற்றம் செய்த காணிகளில் வாகனத் தரிப்பிடம் மற்றும் பூங்காவனம் போன்ற வசதிகளை அமைத்துத் தருவதாகவும் கூறியதை இந்த நேரத்தில் நான் ஞாபக மூட்டவிரும்புகிறேன்.

ஷரீயா நீதியையே கண்டித்து நூல் எழுதிய ஒருவரிடமிருந்து முஸ்லிம்கள் எந்தவிதமான நீதியையும் எதிர்பார்க்க முடியாது. எனவே, இந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரடியாகத் தலையிட்டு தம்புள்ளைப் பள்ளிவாசலை இடமாற்றிச் செல்வதற்கும் வாகனத் தரிப்பிடம் போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்டும் போதுமான இடவசதியுடைய காணிகளை அதாவது, 80 பேர்ச்சஸ் காணியை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பது நல்லிணக்க அரசாங்கத்தின் முஸ்லிம்களுக்கு செய்யக் கூடிய பெரு கைங்கரியமாகும் என்றும் நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

## 10ஆவது ஐ.பி.எல் ஏலம் இன்று பெங்களூரில்!



10ஆவது ஐ.பி.எல் டி20 தொடர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி முதல் மே 21ஆம் திகதி வரை இந்தியாவின் 10 நகரங்களில் நடைபெறவுள்ளது.மொத்தம் 47 நாட்கள் நடைபெறும் இந்த கிரிக்கெட் திருவிழாவின் தகுதி சுற்று மற்றும் நொக்கவுட் சுற்று போட்டிகள் நடைபெறும் இடமும், திகதியும் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இம்முறை ஐ.பி.எல் தொடரிற்கான ஏலம் இன்று காலை 9 மணிக்கு பெங்களூரில் நடைபெறவுள்ளது. அத்துடன் இம்முறை ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்க 799 வீரர்கள் பதிவு செய்து இருந்தனர். இதில் எந்தெந்த வீரர்களை ஏலத்துக்கு தகுதி உடையவர்கள் என்று ஆராயப்பட்டது. அதன்படி இறுதி ஏலப்பட்டியலில் 351 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதில் 122 வெளிநாட்டு வீரர்கள் அடங்குவர். 24 இந்திய வீரர்கள் இடம்பெற்றுள்ளார்கள். இஷாந்த் சர்மா, இயென் மோர்கன், பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ், எஞ்சலோ மெத்யூஸ், பெட் கம்மின்ஸ், மிட்செல் ஜொன்சன் போன்ற வீரர்களுக்கு அதிகபட்சமாக ரூ.2 கோடி அடிப்படை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
8 அணிகளும் சேர்ந்து மொத்தம் 79 வீரர்களை ஏலத்தில் எடுக்கிறார்கள். இதற்காக 351 வீரர்கள் ஏலத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பங்கேற்கும் 8 அணிகள் உள்ளூர்-வெளியூர் அடிப்படையில் தலா 14 லீக் போட்டிகளில் விளையாடும். மொத்தம் 60 போட்டிகள் நடைபெறுகிறது.

## கொல்கத்தா அணியில் நிரோஷன் திக்வெல்ல?

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள பத்தாவது ஐ.பி.எல் தொடரில் இலங்கை அணியின் இளம் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் நிரோஷன் திக்வெல்லவை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வாங்கவுள்ளதாக தெரியவருகின்றது. 23 வயதான திக்வெல்ல, அண்மைக்காலமாக இலங்கை அணியில் இடம்பெற்ற ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் சிறப்பாக விளையாடி வருகின்றார். ஆரம்ப துடுப்பாட்ட வீரரான இவர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொல்கத்தா அணியின் விக்கெட் காப்பாளரான இந்திய வீரர் ரொபின் உத்தப்பா உள்ளூர் போட்டி ஒன்றின்போது காயம் அடைந்துள்ளதால் நிரோஷன் திக்வெல்ல அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, இம்முறை ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்கு விடுக்கப்பட்ட அழைப்பை இலங்கை கிரிக்கெட் அணியின் துணைத்தலைவர் தினேஷ் சந்திமால் மறுத்துள்ளார்.சமீபகாலமாக நடைபெற்ற போட்டிகளில் பெரிதும் சோபிக்கமால் கடும் விமர்சனத்துக்குள்ளான சந்திமால், ஐ.பி.எல். கிரிக்கெட் நடைபெறும் காலத்தில், தன்னை வலுப்படுத்திக்கொள்ள பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.தனக்கு பணம் ஒன்றும் பெரிய விடயம் இல்லை எனவும் தனது தாய் நாட்டுக்கு விளையாடுவதே பெருமை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.நடைபெற்று முடிந்த தென்னாபிரிக்க அணிக்கெதிரான தொடரில் சந்திமால் சிறப்பாக பிரகாசிக்காத காரணத்தால், ஒருநாள் தொடரின் இறுதி இரு போட்டிகளிலும் அவர் பங்கேற்காத நிலைமை ஏற்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்நிலையில்,இம்முறை ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்க 21 இலங்கை வீரர்கள் விண்ணப்பித்துள்ளனர்.இலங்கையிலிருந்து எஞ்சலோ மெத்யூஸ்,தினேஷ் சந்திமால், லக்ஷான் சந்தகென், திஸர பெரேரா, நிரோஷன் திக்வெல்ல, குசல் மெண்டிஸ், குசல் ஜனித் பெரேரா, அகில தனஞ்சய, அசேல குணரத்ன, குசல் மெண்டிஸ், லஹிரு குமார, சுரங்க லக்மால், ஜீவன் மெண்டிஸ், சீக்குகே பிரசன்ன, துஷ்மந்த சமீர, தனஞ்சய டி சில்வா, தில்ஷிலத சில்வா, அஞ்சலோ பெரேரா, தசுன் சானக, ரமேஷ் மெண்டிஸ், மலிந்த புஷ்ப குமார மற்றும் பர்விஸ் மஹ்ரூப் ஆகியோர் விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





மகளிர் உலகக்கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

## வங்கத்தை வீழ்த்திய இலங்கை உலகக்கிண்ணத்திற்கு தகுதி

பீ.எப்.எம் றிஷாட்

கொழும்பில் நடைபெற்றுவரும் பத்து நாடுகளுக்கு இடையிலான மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளின் சுப்பர் சிக்ஸ் சுற்றின் இறுதிப் போட்டிகள் நேற்றைய தினம் நடைபெற்றதுடன்,இதில் இலங்கை, இந்தியா, தென்னாபிரிக்கா, ஆகிய நாடுகள் தத்தமது போட்டிகளில் வெற்றிபெற்று இங்கிலாந்தில் இவ்வருடம் நடைபெறவுள்ள மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு தகுதிபெற்றன.

கொழும்பு என்.சி.சி மைதானத்தில் நடைபெற்ற குழு ஏ போட்டியில் பங்களாதேஷ் மகளிர் அணியை எதிர்த்தாடிய இலங்கை மகளிர் அணி டக்வர்த் லூவிஸ் முறைப்படி 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன்படி, நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் மகளிர் அணி முதலில் களத்தடுப்பு செய்ய தீர்மானித்தது. இலங்கை மகளிர் அணியின் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனை சமரி அத்தபத்துவின் அரைச்சதத்துடன் 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 197 ஓட்டங்களைக் குவித்தது.துடுப்பாட்டத்தில் இலங்கை சார்பாக சமரி அத்தபத்து 84 ஓட்டங்களையும், ஹசினி பெரேரா 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் பங்களாதேஷ் மகளிர் அணி சார்பாக சல்மா காட்டன், 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் மகளிர் அணி,இலங்கை அணியின் பந்து வீச்சில் ஆரம்பம் முதலே தடுமாறியது.இதன்படி மழை காரணமாக போட்டி நிறுத்தப்பட்ட போது பங்களாதேஷ் மகளிர் அணி 21 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. எனினும் சீரற்ற காலநிலை தொடர்ந்து போட்டிகளுக்கு தடையாக அமைந்த காரணத்தால் டக்வர்த் லூவிஸ் முறைப்படி இலங்கை அணி 42 ஓட்டங்களால் வெற்றிபெற்று உலகக்கிண்ண போட்டிகளுக்கு தகுதிபெற்றது.



இதன்படி இலங்கை மகளிர் அணி பங்குபற்றிய 3 போட்டிகளில் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் மகளிர் அணிகளுடன் வெற்றிபெற்று இந்தியாவுடன் மற்றும் தோல்வியைத் தழுவி புள்ளிப் பட்டியலில் 3ஆவது இடத்தைப் பெற்று உலகக்கிண்ணத்தில் விளையாட தகுதிபெற்றது.

இதனிடையே, இந்தியா மற்றும் பாகிஸ்தான் மகளிர் அணிகளுக்கிடையே கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் இந்திய மகளிர் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று உலகக்கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றது. இதேவேளை, பி பிரிவில் தென்னாபிரிக்க மற்றும் அயர்லாந்து மகளிர் அணிகளுக்கிடையிலான போட்டி கொழும்பு சி.சி.சி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் டக்வர்த் லூயிஸ் முறைப்படி 36 ஓட்டங்களால் தென்னாபிரிக்க மகளிர் அணி வெற்றிபெற்று மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளுக்குத் தெரிவாகியது.எனவே இம்முறை இங்கிலாந்தில் நடைபெறவுள்ள மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணிகளுடன் இந்தியா, தென்னாபிரிக்கா,இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தலைவர் பதவியிலிருந்து டோனி நீக்கம்

ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்கும் புனே அணி தலைமைப் பதவியிலிருந்து டோனி நீக்கப்பட்டுள்ளார். இவருக்குப்பதில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய அணி முன்னாள் தலைவர் டோனி, 35. இந்திய அணிக்காக உலககிண்ணத்தை வென்று தந்தவர். சமீபத்தில், இந்திய அணியின் தலைவர் பதவியிலிருந்து விலகினார். ஐ.பி.எல்., தொடரில் சென்னை அணியை வழிநடத்தி (2010,11) இரண்டு முறை கிண்ணத்தை வென்று காட்டினார். சூதாட்ட புகாரில் சென்னை அணி சிக்கியதால் இரண்டு ஆண்டு தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து, கடந்த ஆண்டில் புனே அணியில் தலைவராகச் செயற்பட்டார். இதில் அந்த அணிக்கு 7ஆவது இடமே கிடைத்தது.





## ஆர்ஜென்டினாவில் பஸ் விபத்து



ஆர்ஜென்டினாவில் சுற்றுலா பஸ் கவிழ்ந்த விபத்தில் 19 பேர் பலியாகியுள்ளனர்.ஆர்ஜென்டினாவில் சிலி நாட்டின் எல்லையில் மென்டோஷா மாகாணம் உள்ளது. அங்குள்ள அகான் காகுவா மலைப்பகுதி சுற்றுலாத் தலமாகும்.

இங்கு பயணம் செய்த சுற்றுலா பஸ் ஒரு வளைவில் திரும்பிய போது பயங்கரமாக மோதிக் கவிழ்ந்தது.


அதில் 19 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சையளிக்கப்படுகிறது. இறந்தவர்களில் 3 பேர் குழந்தைகள்.

பலியானவர்களில் பெரும் பாலானவர்கள் ஆர்ஜென்டினாவை சேர்ந்தவர்கள். ஆனால் அவர்கள் சிலி, கொலம்பியா மற்றும் ஹைதியில் இருந்து வந்து குடியேறியவர்கள் ஆவர். விபத்துக்கு அபாயகரமான வளைவே காரணம் என பொலிசார் தெரிவித்தனர்.

## முதலமைச்சர் பழனிச்சாமி பதவி நிரந்தரமானதல்ல

### பா.ஜ.க. கருத்து





தமிழகத்தில் இந்த ஆட்சி நீடிக்க வேண்டும் என்றுதான் மத்திய அரசு விரும்புகிறது. ஆனால் மக்கள் அதை விரும்பவில்லை. தற்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி வாடகை நாற்காலியில் அமர்ந்துள்ளார். இது நிரந்தரமானது அல்ல. என பா.ஜ.க. மத்திய மந்திரி பொன் இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கோவில்பட்டியில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர்,

சட்டசபையில் தி.மு.க. உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதத்தை ஏற்க முடியாது. அதேபோன்று சபாநாயகரும் தேவையில்லாத வார்த்தைகளை பயன்படுத்தி உள்ளதையும் ஏற்க முடியாது. இதற்காகவா பொதுமக்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்து சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்தனர்?.

சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் மு.க.ஸ்டாலின் தாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அவ்வாறு நடந்திருந்தால் அது தொடர்பாக நீதி விசாரணை நடத்த வேண்டும் - என்றார்.

# உலகச் செய்திகள்

## கடலுக்கு அடியில் புதிய கண்டம் கண்டுபிடிப்பு



உலகில் தற்போது ஆசியா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா என 6 கண்டங்கள் உள்ளன. தற்போது புதிதாக ஒரு கண்டம் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இது தென் பசிபிக் கடலுக்கு அடியில் உள்ளது. அதாவது தற்போதுள்ள நியூசிலாந்துக்கு அடியில் கடலுக்குள் மூழ்கி கிடப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கண்டத்துக்கு 'சுஷிலாண்டியா' என்று பெயரிடப்பட்டுள்ளது. இது அண்டை கண்டமான அவுஸ்திரேலியாவின் மூன்றில் 2 மடங்கு அளவு கொண்டது.

அதாவது 50 லட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள ஷிலாண்டியா கண்டம் கடலுக்கு அடியில் மூழ்கிக் கிடக்கிறது. அதன் அளவு 94 சதவீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் நியூசிலாந்தை போன்று 3 மடங்கு பெரியது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

புவியியல் அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இது குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளனர். இப்புதிய கண்டம் உருவானது எப்படி என்பது குறித்து ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. மேலும் இத்தகவல் அமெரிக்க ஆராய்ச்சியியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

## சம்சுங் துணைத் தலைவரிடம் பொலிஸார் தீவிர விசாரணை



தென் கொரிய தலைநகர் சியோலில் தலைமை அரசு வழக்குரைஞர் அலுவலகத்துக்கு விசாரணைக்காக சனிக்கிழமை அழைத்து வரப்பட்ட சாம்சங் துணைத் தலைவர் லீ ஜே-யோங் ஊழல் வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள சாம்சங் துணைத் தலைவரிடம் சனிக்கிழமை தீவிர விசாரணை நடைபெற்றது.

அரசிடமிருந்து ஒப்புதல்களைப் பெற 4 கோடி டாலர் (சுமார் ரூ. 270 கோடி) லஞ்சம் அளித்தார் என்பது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சாம்சங் துணைத் தலைவர் லீ ஜே-யோங் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட வட கொரிய அதிபர் சிக்கிய ஊழல் வழக்கிலும் லீ ஜே-யோங்குக்கு தொடர்பு உள்ளது என்ற குற்றச்சாட்டும் அவர் மீது உள்ளது.

சியோல் நகர மத்திய மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் லீ ஜே-யோங் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், அவர் சிறையிலிருந்து அரசு சிறப்பு வழக்குரைஞர் அலுவலகத்துக்கு விசாரணைக்காக சனிக்கிழமை அழைத்து வரப்பட்டார். அப்போது லீ ஜே-யோங் கைகளில் விலங்கிடப்பட்டிருந்தது. அதே நிலையில் அவரிடம் அரசு வழக்குரைஞர்கள் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணை முடிந்த பிறகு, அவர் வெளியே வந்தபோது, அங்கு காத்திருந்த செய்தியாளர்கள் அவரிடம் சரமாரியாக கேள்வி கேட்டனர். ஆனால் அவர் எந்த பதிலும் கூறாமல் மௌனமாக காவலர்களுடன் சென்றுவிட்டார்.

## செல்பி மோகத்தால் பாகிஸ்தான் சிறுமி பலி



பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணம் பரிதாபாத் கானேவால் பகுதியை சேர்ந்த சிறுமி ரெயிலுடன் சேர்ந்து செல்பி எடுக்க விரும்பினாள்.

கானெவால் ரெயில் நிலையத்தில் செல்பி எடுக்க செல்போனுடன் தண்டவாளம் அருகே காத்திருந்தாள். அப்போது கராச்சியில் இருந்த ராவல்பிண்டி நோக்கி எக்ஸ்பிரஸ் ரெயில் வந்தது.

அதை அவள் கவனிக்கவில்லை. 'செல்பி' எடுப்பதிலேயே கவனமாக இருந்தாள். அப்போது அந்த ரெயில் சிறுமி மீது மோதியது. இதனால் அவள் தூக்கி வீசப்பட்டாள்.

இதனால் தலையில் பலத்த காயம் அடைந்த அவளை முல்தானில் உள்ள ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தாள்.

## சார்க் நாடுகள் அமைப்பை பலவீனப்படுத்துகிறது இந்தியா

### நேபாள முன்னாள் பிரதமர் குற்றச்சாட்டு

'சார்க் அமைப்பை இந்தியா பலவீனப்படுத்தி வருகிறது' என்று நேபாள முன்னாள் பிரதமர் கே.பி.ஒலி குற்றம்சாட்டியுள்ளார்.

நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சிமன்ற குழுக் கூட்டம் காத்மாண்டில் வெள்ளிக்கிழமை நிறைவடைந்தது. இதில், கே.பி.ஒலி பங்கேற்று அரசியல் ஆய்வுக் கட்டுரை ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

பிம்ஸ்டெக், பிபிஐஎன் ஆகிய அமைப்புகளுக்கு இந்தியா அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

சார்க் மாநாடு தடைபட்டுள்ள நிலையில், அது மீண்டும் நடைபெறுவதற்கு இந்தியா சார்பில் எவ்வித ஒத்துழைப்பும் அளிக்கப்படவில்லை.

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே நிலவிவரும் பிரச்சினை காரணமாகவும், பங்களாதேஸ் நாட்டுடனான இந்தியாவின் நிலைப்பாடு காரணமாகவும் சார்க் அமைப்பு செயலிழந்துள்ளது.

சார்க் அமைப்பை இந்தியா பலவீனப்படுத்தி வரும் நிலையில், இதை தடுத்து நிறுத்துவதற்கு நேபாளம் எவ்வித முயற்சியையும் எடுக்கவில்லை என்று அந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

நேபாளத்தில் புதிய அரசியல் சாசனம் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அக்டோபர் 2015இல் கே.பி.ஒலி அந்த நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்றார். எனினும், கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவர் தனது பதவியை இராஜிநாமா செய்தார்.

அப்போது, இந்தியாவின் தலையீட்டின் காரணமாகவே தான் பதவியிழக்க நேரிட்டதாக அவர் புகார் தெரிவித்திருந்தார்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 20th FEBRUARY 2017